கொட்டையூர்த்தலமான்மியம்

திருவையாறு வித்துவான்,

வை. சுந்தரேச வாண்டையார்

எழுதியது.

*

குடந்தை

ஸ்ரீவித்யா பவர் பிரஸில் அச்சிட்டப் பெற்றது.

உரிமை ஆசிரியர்க்கே.] 1949 [விலை அணா 12.

உள்ளுறை.

எண்.	பொருள்.	பக்கம்.
1.	முன்னுரை	... v–ix
2.	மதிப்புரை	... x–xi
3.	தேவாரம்	... xiii-xv
4.	திருப்புகழ்ப்பாடல்	... xvi
5.	கடவுள்வணக்கச் செய்யுட்கள்	... 1
6.	சோழநாட்டுச் சிறப்பு	... 5
7.	கொட்டையூர் நகரச்சிறப்பு	... 13
8.	முதல் அத்தியாயம், தோற்றுவாய்	... 19
9.	இரண்டாம் அத்தியாயம், ஏரண்டபுரமான வரலாறு முதலியன	... 22
10.	மூன்றும் அத்தியாயம். சுருசி சாப விமோசனம்	... 31
11.	கல்வெட்டுக்கள்	... 37 & 41

பிழையும் திருத்தமும்.

பக்கம்.	வரி.		
10	5	நிறைநது	நிறைந்து
15	24	யளிப்பதுபோலும்,	யளிப்பதுபோலும்.
19	1	பாடியே,	பாடியே.
31	20	அவனதுஸ்பரிவாரர்கள்	அவனது பரிவாரங்கள்.
32	1	என்பான்.	என்பான்,
29	3	இராசூயம்	இராசசூயம்
30	11	மனவாளனுகப்	மணவாளனுகப்
IX	11	வேங்கிடாசலம்	வேங்கடாசலம்
XVI	17	பெறுமாளே	பெருமாளே

முன்னுரை

உ

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தி
நலஞ்சுடரே நால்வேதத் தப்பா னின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலா யிதுவுன் றன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத்தெங் கடவு ளானே.

திருச்சிற்றம்பலம்

கொட்டையூர் என்னும் சிவதலம் கும்பகோணத்திற்கு வடமேற்கேயுள்ளது. இப்பொழுது அக்கும்பகோண நகராண்மைக்கழகத்தின் ஆட்சியில் சேர்ந்துள்ளது. ஆளுடைய அரசரால் பாடப்பெற்ற சிறப்புடையது.

கொட்டைமரத்தைத் தலவிருட்சமாகப் பெற்றமையால் இவ்வூர் கொட்டையூர் எனப் பெயர் பெற்றது. ஏரண்டபுரம் என்பது இதன் வடமொழிப்பெயர்.

இத்தலத்தில் ஏரண்ட முனிவர், பத்திரயோகி முதலிய பலர் இறைவனை வழிபட்டு இம்மை மறுமை வீட்டின்பங்களை யடைந்துய்ந்தனர். பத்திரயோகி முனிவரது வேண்டுகோளுக்கிணங்க இறைவன் அம்முனிவருக்குக் கோடிசிவலிங்கமாகத் தன் திருவுருவைக் காட்டியருளினான். பின் தன் ஒரு சிவலிங்கவடிவிலே கோடியுருவம் அமையும்படி இன்றும் விளங்குகின்றான். இவ்வாறு கோடிலிங்க வடிவம் தன்மேல் அமையக்கொண்டு விளங்கு

வதால் இத்தலத்து இறைவனுக்குக் கோடீச்சுரன் என்ற திருப்பெயரும், கோயிலுக்குக் கோடீச்சுரம் என்ற திருப்பெயரும் ஏற்பட்டன. சிவபெருமானேயன்றி இத்தலத்து விநாயகர், அம்பிகையார், முருகன், சண்டேசுவரர் என்ற மூர்த்திகளும் அந்த முனிவருக்குக் கோடி கோடியாகத் தம் திருவுருவங்களைக் காட்டினமையால் தத்தம் பெயர்களோடு கோடி என்ற அடைமொழி கூட்டி வழங்கப் பெறுகின்றனர். பஞ்சமூர்த்திகளும் கோடி வடிவங் கொண்டிலங்கும் இத்தலத்தில் அந்த மூர்த்திகளைத் தரிசித்தோர் கோடி தலத்தில் தரிசித்த பயனடைவரென்றும் இங்குச் செய்த எப்புண்ணியமும் பிற தலங்களிற் செய்த புண்ணியங்களினும் கோடி மடங்கு பயன்தரும் என்றும், இத்தலத்தில் செய்த பாவமும் அப்படியே கோடி மடங்காகி கழுவா யிலதாமென்றும் பெரியோர் கூறுவர். அதனால் எங்கும் நீங்காத பாவம் கும்பகோணத்தில் நீங்கும். கும்பகோணத்தில் செய்த பாவம் கொட்டையூரில் நீங்கும். கொட்டையூரிற் செய்த பாவத்திற்குக் கழுவாய் இல்லை என்னும் பொருள்பட வடமொழிச்சுலோகம் ஒன்று வழங்குகிறது என்பர்.

இத்தகையச் சிறப்புவாய்ந்த இத்தலத்தின்வரலாறு வடமொழிப் பிரம்மாண்ட புராணத்தில் 158வது முதல் 165வது அத்தியாயம் முடிய எட்டு அத்தியாயங்களில், ஏரண்டவனமான்மியம் எனக் கூறப்பட்டுள்ளதென்பர். அவை முற்றும் இப்போது கிடைக்கவில்லை. தஞ்சைக் கலைமகள் மன்றத்தில் (சரஸ்வதி மஹாலில்) 158, 159, 160வது அத்தியாயங்கள் மட்டும் கிடைத்தன. இந்நூல் மூலப்பிரதியின் முழுப்பகுதியையும் பற்பல இடங்களில் தேடிக் காணப்பெறாது, கிடைத்தமட்டில் உதவியவர் கோடீச்சுரப்பெருமான் திருக்கோயில் மானேஜிங் டிரஸ்டியாக இருந்துவரும் உயர்திரு V. S. குஞ்சிதபாதஞ்

செட்டியார் ஆவர். அந்த வடமொழிப்பிரதியைத் தமிழில் மொழி பெயர்த்து உதவியவர் கும்பகோணம் சாரதா விலாச அச்சுக்கூட மானேசர் திரு. T. M. நாராயண சாத்திரியார் ஆவர். அவரது மொழி பெயர்ப்பின் துணை கொண்டு இம்மான்மியம் என்னால் எழுதப்பெற்றது. தமிழ்ப்பாடல்களைப் பயின்று பொருளறிதல் பலர்க்கும் இக்காலத்து அரிதாயிருத்தலின் இத்தல மான்மியம் செய்யுள்நடையில் எழுதப்படாமல் உரை நடையில் எழுதப்படலாயிற்று.

இந்நூலில் உள்ள கடவுள்வணக்கச் செய்யுட்கள், சோழநாட்டுச் சிறப்பு, கொட்டையூர் நகரச் சிறப்பு என்னும் மூன்று பகுதிகளும் என்னால் புதியனவாக எழுதிச் சேர்க்கப்பெற்றன. இந்நூலின் இறுதியில் கோடீச்சுரப் பெருமான் கோயில் கல் வெட்டுக்களின் மூலங்களை கிடைத்த அளவு படித்துச் சேர்த்துள்ளேன். (இவற்றின் சுருக்கங்களைக் கொட்டையூர்த் தலவரலாறு என்னும் நூலினால் அறியலாம்).

திருப்பனந்தாள் காசிமடத்துப் பத்தொன்பதாம் பட்டத்துத் தலைவரும், அருங்கலை விநோதரும் பெருங் கொடை வள்ளலும், தமிழ் நூல்களின் முன்னேற்றத் தைப்பற்றிய வழிகளை இரவும் பகலும் ஆய்ந்துகொண் டிருந்தவருமாகிய உயர்சைவத் திரு. **சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்** இதனை எழுதுமாறு என்னைப் பணித்தருளினார்கள். செந்திலாண்டவன் திருவருட்குறிப்பே இஃது என்பதை எண்ணி அப்பெருமானின் திருவடிகளைத் துணையாகக்கொண்டு யான் இந்நூலை எழுதிச் சுவாமிகள் திருமுன்பு சேர்ப்பித்தேன். சுவாமிகள் இந்நூலையும் இதற்கு **நலமிகு புலமைமிக்க நாவலர் நாட்டார் ஐயா** அவர்கள் வழங்கிய மதிப்புரையையும் படித்துப் பெருமகிழ்வுற்ற தோடு, இதைச் சிறந்தமுறையில் அச்சிட்டு, கோடீச்சுரப்

பெருமானின் திருக்கோயிலில் தக்கார் தலைமையில் வெளியிடும் கருத்தினை புலப்படுத்தினார்கள். உலகப் பெரும்போரான் நல்லதாளின்மையான் சுவாமிகள் காலந்தாழ்த்தி வந்தார்கள்.

இந்நிலையில் சுவாமிகளது பெருமதிப்புக்குரியவர்களும், பேராற்றலும் பேரறிவும் சான்றவர்களும் கோடீச்சுரப்பெருமானின் திருக்கோயில் டிரஸ்டியுமாகிய உயர் சைவத் திரு. V. S. குஞ்சிதபாதஞ் செட்டியார் அவர்கள், கொட்டையூர்த் தலவரலாறு என்னும் நூல் ஒன்றை என்னை எழுதச்செய்து தங்கள் சொந்தசெலவில் ஆயிரம் சுவடிகளை அச்சிட்டு வெளியிட்டருளினார்கள். கோடீச்சுரப் பெருமானின் திருக்கோயிலைப்பற்றி மக்கள் விரைவில் அறிந்துகொள்வதற்கு இத்தகையதொரு நூல் சிறந்த துணை ஆகும் என்பதைச் சுவாமிகள் திருவுளங்கொண்டு திருமிகு செட்டியாரவர்களின் செயலைப் பாராட்டினார்கள். பின்னர்ச் சிலமாதங்களில் பத்தொன்பதாம் பட்டத்துச் சுவாமிகள் (26—3—1944) சுபானு ஆண்டு பங்குனித் திங்கள் 13ம் நாள் பரிபூரண நிலையை அடைந்தார்கள். அன்னாரது சைவத் தொண்டினையும், தமிழ்த் தொண்டினையும் நம் நாட்டில் அறியாதார் யார்? அவர்களுக்குத் தமிழ்நாடு பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

பின்னர் எண்டிசையும் புகழ் பண்டிதமணி அவர்கள் என் வேண்டுகோளுக்கு இசைந்து இந் நூலிற்கு மதிப்புரை ஒன்றை அளித்தருளினார்கள். தமிழகத்துப் பெரும் புலவர் பெருமக்கள் இருவருடைய மதிப்புக்குரிய இந் நூல் அச்சிடப்பெறாது இருத்தலை அறிந்து திருப்பனந்தாள் காசிமடத்தில் இருபதாம் பட்டத்தில் அருட்செங்கோல் நடத்தி வருபவர்களும், சிறந்த கல்வியும் சீரியஒழுக்கமும் மிக்கவர்களுமாகிய உயர் சைவத்திரு காசிவாசி

அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் இந் நூலை அச்சிடுவதற்குரிய முழுச்செலவையும் உள்ளம் உவந்து ஏற்றருளினார்கள்.

இந் நூல் அச்சாகுங்கால் அச்சுப் பிரதிகளில் சொற்களின் இடையில் இடம் விடவேண்டிய இடத்து விடுத்தும் வேண்டாவிடத்து சொற்களைச் சேர்த்தும், எழுத்துப் பிழை நேரிடாவண்ணம் கூர்ந்து நோக்கி ஒப்பிட்டும் உதவியவர்கள் திருவையாறு, வித்யாரத்னம், டாக்டர், P. S. சுப்பிரமணிய சாஸ்திரியார் M A., Ph. D. கரந்தைப் புலவர் கல்லூரியின் ஓய்வுபெறு தலைவர் கரந்தைக் கவியரசு R. வேங்கிடாசலம் பிள்ளை இவ்விருவரும் ஆவர்.

இந் நூலை எழுதுங்கால் எனக்குத்தோன்றிய ஐயங்கள் சில உள. அவற்றைத் திருவாளர்களான பண்டித அ. கந்தசாமி பிள்ளை, வித்துவான் C. K. நடேச கவுண்டர், வித்துவான் V. உலக ஊழியர், இம் மூவரும் உடனடியாகத் தீர்த்தருளினார்கள்

மேற்குறித்த இவர்கள் அனைவர்க்கும் என் நன்றியினையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இம் முயற்சியில் என்னைப் புகுத்திய திருவருளை வழுத்துகின்றேன்.

இந் நூல் வெளியீடு விழாவை, கோடீச்சுரப் பெருமானின் பங்குனித் திருவிழா ஏழாம் நாளாகிய இற்றை நாளில் (8 - 4 - 49) பெருஞ்சிறப்புடன் உயர் சைவத் திரு. V. S. குஞ்சிதபாதஞ் செட்டியார் அவர்கள் நடத்தியருளுகின்றார்கள். அவர்களது சிவநெறித் தொண்டையும் செந்தமிழ்ப் பற்றையும் பெரிதும் போற்றி மகிழ்கின்றேன்.

இங்ஙனம்,

வை. சுந்தரேச வாண்டையார்.

மகாமகோபாத்யாய, பண்டிதமணி
மு. கதிரேசச்செட்டியார்

மகிபாலன்பட்டி
16—1—1947

மதிப்புரை

திருவையாறு வித்துவான் திரு. வை. சுந்தரேசவாண்டையார் அவர்கள் எழுதிய கொட்டையூர்த்தலமான்மியம் என்னும் உரைநடை நூலைப் பார்த்தேன். சோழநாட்டுச் சிறப்பு, கொட்டையூர் நகரச்சிறப்பு, என்னும் இரண்டு பகுதிகளும் திரு. வாண்டையாரவர்கள் தாமே எழுதியவை. அவை பண்டைத்தமிழ்இலக்கியங்கள் பலவற்றையும் ஆராய்ந்து பயின்றதன் பயனாகத் தெள்ளிய சுவையுள்ள தமிழ்நடையில் அமைந்துள்ளன. இயற்கைவருணனைகள் உள்ளத்தை உவகைப்படுத்துகின்றன. மற்றைப்பகுதிகள் வடமொழியினின்று மொழி பெயர்க்கப்பட்டனவாயினும் தமிழ்நடை தூய்மையுடையனவாயிருத்தல் இன்புறத்தக்கது. கொட்டையூர் கோடீச்சுரர் முதலிய பெயர்க் காரணங்களும் ஆங்குள்ள இறைவனை வழிபட்டு நலம் எய்திய தேவர், முனிவர், மக்கள் வரலாறுகளும் பிறவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளன. இத்தகைய புராணவரலாறுகளை இக்காலத்தில் விரும்புவோர் சிலராயினும் தமிழ் உரைநடை இனிமையும் தெய்வக் கொள்கையும் முறையே தமிழறிஞர்க்கும் சமயப்பற்றுடையார்க்கும் உவகையளிப்பனவாம். திருப்பனந்தாள் ஆதீனத்தார் விருப்பப்படி இஃது எழுதப்பட்டதென்பதும், இந்நூலாசிரியரின் தந்தையார் சைவப்பற்று மிக்க வைத்தியலிங்க வாண்டையாரின் நினைவிற்கு அறிகுறியாக வெளிப்படுத்தப் பெறுகின்றதென்பதும் அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். இந்நூலாசிரியர் தமிழ்நூற்பயிற்சியும் சிவபத்தியும் மிக்கவர். தம் அருமை மகள் செல்வி. கரும்படுசொல்லியைத் தமிழ்ப்புலமை பெறச்செய்து அதன் முகமாகப் பெண்ணுலகத்தைச் சிறப்புறச் செய்து வரும் நன்னோக்கம் உடையவர். இந்நூல் தமிழ்ச்சைவ உலகத்திற்குப் பயன்பட்டு ஆசிரியராகிய திரு. சுந்தரேச வாண்டையாரவர்களுக்குப் புகழையும் புண்ணியத்தையும் வளர்த்துத் திகழ்வதாக!

மகிபாலன்பட்டி
16—1—'47

மு. கதிரேசன்

நாவலர்
பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்
தலைவர், கரந்தைப் புலவர் கல்லூரி

2659, இராஜகோபால
சாமி கோயில் தெரு
தஞ்சாவூர்
தேதி 19—12—1943

மதிப்புரை

சிறந்த தமிழ்க்கல்வியும் ஆராய்ச்சியறிவும் உடையாரும் சிவபத்திமிக்காருமாகிய திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் இயற்றிய கொட்டையூர்த்தல மான்மியம் என்னும் உரைநடை நூலைப் படித்து இன்புற்றேன். பழைய பெரிய தமிழ்நூற்களின் விழுப்பமுடைய கருத்துக்கள் பல இதன்கண் ஆண்டாண்டு ஏற்றபெற்றி அமைக்கப் பெற்றுள்ளன. பொருட்பொலிவாலும் நடைச் சிறப்பாலும் இதனை ஓர் வசனகாவியம் என்று கூறுதல் தகும். இதனைக் கற்போர் தமிழின் சுவையை நுகர்ந்தின்புறுதலோடு சிவபத்தியும் கைவரப் பெறுவோராவர். திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர்களும் பேரறிவும் பேராற்றலுமுடையவர்களும் தம் நுண்மதியால் ஆய்ந்து கண்ட வழிகளிற் பெரும்பொருள் வழங்கித் தமிழை வளம் படுத்தும் சதுரப்பாட்டினால் தமிழ்மக்கள் பலருடைய உள்ளத்திலும் நின்று நிலவுபவர்களும் ஆகிய உயர்திரு சாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் இதனை வெளியிடுதற்கு முழு உரிமையுமுடையவர்கள். அவர்கள் கடைக்கண் நோக்கிற்கு இஃது இலக்காயினமை அறிந்து மிக மகிழ்கின்றேன். திரு. வை. சு. வாண்டையார் அவர்கள் தமிழ்த் தெய்வத்தின் தண்ணருளால் இன்ன பல நூல் இயற்றிச் சிறப்புறுவாராக.

ந. மு. வேங்கடசாமி நாட்டார்

தேவாரம்.

திருவலஞ்சுழியும் கொட்டையூரும்.

திருத்தாண்டகம்.
திருச்சிற்றம்பலம்.

1. கருமணிபோற் கண்டத் தழகன் கண்டாய்
கல்லா னிழற்கீ ழிருந்தான் கண்டாய்
பருமணி மாநாகம் பூண்டான் கண்டாய்
பவழக்குன் றன்ன பரமன் கண்டாய்
வருமணிநீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் வரதன் கண்டாய்
குருமணிபோ லழகமருங் கொட்டை யூரிற்
கோடீச் சுரத்துறையுங் கோமான் றானே.

2. கலைக்கன்று தங்கு கரத்தான் கண்டாய்
கலைபயில்வோர் ஞானக்க ணானன் கண்டாய்
அலைக்கங்கை செஞ்சடைமே லேற்றான் கண்டாய்
அண்ட கபாலத்தப் பாலான் கண்டாய்
மலைப்பண்டங் கொண்டு வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியின் மேவிய மைந்தன் கண்டாய்
குலைத்தெங்கஞ் சோலைசூழ் கொட்டை யூரிற்
கோடீச் சுரத்துறையுங் கோமான்றானே.

3. செந்தா மரைப்போ தணிந்தான் கண்டாய்
சிவன்கண்டாய் தேவர் பெருமான் கண்டாய்
பந்தாடு மெல்விரலாள் பாகன் கண்டாய்
பாலொடு நெய்தயிர்தே னாடி கண்டாய்
மந்தார முந்தி வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியின் மன்னு மணாளன் கண்டாய்
கொந்தார் பொழில்புடைசூழ் கொட்டை யூரிற்
கோடீச் சுரத்துறையுங் கோமான் றானே.

4. பொடியாடு மேனிப் புனிதன் கண்டாய்
புட்பாகற் காழி கொடுத்தான் கண்டாய்
இடியார் கடுமுழக்கே றார்ந்தான் கண்டாய்
எண்டிசைக்கும் விளக்காகி நின்ருன் கண்டாய்
மடலார் திரைபுரளுங் காவி ரிவாய்
வலஞ்சுழியின் மேவிய மைந்தன் கண்டாய்
கொடியாடு நெடுமாடக் கொட்டை யூரிற்
கோடீச் சுரத்துறையுங் கோமான் ருனே.

5. அக்கரவ மரைக்கசைத்த வம்மான் கண்டாய்
அருமறைக ளாறங்க மானுன் கண்டாய்
தக்கனது பெருவேள்வி தகர்த்தான் கண்டாய்
சதாசிவன்காண் சலந்தரனைப் பிளந்தான் கண்டாய்
மைக்கொண்மயுற் றழைகொண்டு வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியான் கண்டாய் மழுவன் கண்டாய்
கொக்கமரும் வயல்புடைசூழ் கொட்டை யூரிற்
கோடீச் சுரத்துறையுங் கோமான் ருனே.

6. சண்டனைநல் லண்டர்தொழச் செய்தான் கண்டாய்
சதாசிவன் கண்டாய் சங்கரன்ருன் கண்டாய்
தொண்டர்பலர் தொழுதேத்துங் கழலான் கண்டாய்
சுடரொளியாய்த் தொடர்வரிதாய் நின்ருன் கண்டா
மண்டுபுனற் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய் [ய்
மாமுனிவர் தம்முடைய மருந்து கண்டாய்
கொண்டறவழ் கொடிமாடக் கொட்டை யூரிற்
கோடீச் சுரத்துறையுங் கோமான் ருனே.

7. அணவரியான் கண்டா யமலன் கண்டாய்
அவிநாசி கண்டா யண்டத்தான் கண்டாய்
பண மணிமா நாக முடையான் கண்டாய்
பண்டரங்கன் கண்டாய் பகவன் கண்டாய்
மணல்வருநீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாதவற்கு நான்முகற்கும் வரதன் கண்டாய்
குணமுடைநல் லடியார்வாழ் கொட்டை யூரிற்
கோடீச் சுரத்துறையுங் கோமான்ருனே.

8. விரைகமழு மலர்க்கொன்றைத் தாரான் கண்டாய்
வேதங்க டொழுநின்ற நாதன் கண்டாய்
அரையதனிற் புள்ளியத ளுடையான் கண்டாய்
அழலாடி கண்டா யழகன் கண்டாய்
வருதிரை நீர்ப் பொன்னிவலஞ் சூழியான் கண்டாய்
வஞ்சமனத் தவர்க்கரிய மைந்தன் கண்டாய்
குரவமரும் பொழில்புடைசூழ் கொட்டை யூரிற்
கோடீச் சுரத்துறையுங் கோமான் றானே.

9. தளங்கிளருந் தாமரையா தனத்தான் கண்டாய்
தசரதன்றன் மகனசைவு தவிர்த்தான் கண்டாய்
இளம்பிறையு முதிர்சடைமேல் வைத்தான் கண்டாய்
எட்டெட் டிருங்கலையு மானன் கண்டாய்
வளங்கிளர் நீர்ப் பொன்னிவலஞ் சூழியான் கண்டாய்
மாமுனிக டொழுதெழுபொற் கழலான் கண்டாய்
குளங்கிளர்செங் குவளைகிளர் கொட்டை யூரிற்
கோடீச் சுரத்துறையுங் கோமான் றானே.

10. விண்டார் புரமூன் றெரித்தான் கண்டாய்
விலங்கலில்வல் லரக்கனுட லடர்த்தான் கண்டாய்
தண்டா மரையானு மாலுந் தேடத்
தழற்பிழம்பாய் நீண்ட கழலான் கண்டாய்
வண்டார்பூஞ் சோலைவலஞ் சூழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் மறையோ டங்கம்
கொண்டாடு வேதியர்வாழ் கொட்டை யூரிற்
கோடீச்சுரத்துறையுங் கோமான் றானே.

திருச்சிற்றம்பலம்.

———

திருப்புகழ்ப்பாடல்.

பட்டுமணிக் கச்சிறுகக் கட்டியவிழ்த் துத்தரியப்
பத்தியின்முத் துச்செறிவெற் பிணையாமென்—
பற்பமுகைக் குத்துமுலைத் தத்தையர்கைப் புக்குவசப்
பட்டுருகிக் கெட்டவினைத் தொழிலாலே;

துட்டனெனக் கட்டனெனப் பித்தனெனப் பரட்டனெனச்
சுற்றுமறச் சித்தனெனத் திரிவேனைத்—
துக்கமறுத் துக்கமலப் பொற்பதம்வைத் துப்பதவிச்
சுத்தியணைப் பத்தரில்வைத் தருள்வாயே;

சுட்டபொருட் கட்டியின்மெய்ச் செக்கமலப் பொற்கொடி
துக்கமுறச் சொர்க்கமுறக் கொடியாமூர்— [யைத்
சுத்தரதத் திற்கொடுபுக் குக்கடுகித் தெற்கடைசிச்
சுற்றுவனத் திற்சிறைவைத் திடுதீரன்;

கொட்டமறப் புற்றரவச் செற்றமறக்
குற்றமறச் சுற்றமறப் பலதோளின்—
கொற்றமறப் பத்துமுடிக் கொத்துமறுத் திட்டதிறற்
கொற்றர்பணிக் கொட்டைநகர்ப் பெருமாளே,

—அருணகிரிநாதர்,

உ

திருச்சிற்றம்பலம்.

கொட்டையூர்த்தலமான்மியம்.

கடவுள்வணக்கச்செய்யுட்கள்.

கோடிவிநாயகர்.

தருங்கோடி ரண்டினுட னிரண்டுளவெண்
குஞ்சரமுந் தருவுந் தேனும்
மருங்கோடி யலைபுரளும் பாற்கடலு
மணிப்பணமெல் லணையும் பூமேல்
அருங்கோடி கலைவல்ல மாதுபுணர்
முதல்வாழ்வு மகலா வின்பும்
பெருங்கோடி யீச்சுரத்துட் கோடிவிநா
யகன்மலர்த்தாள் பேணு வோர்க்கே.

பொழிப்பு :—பெருமை பொருந்திய கோடீச்சுரத்தின் மேவிய கோடிவிநாயகனார் தமது மலர்ப்பதங்களை வழிபடுவோர்க்கு நான்கு கொம்புகளையுடைய வெள்ளையானையையும், கற்பகத்தருவையும், காமதேனுவையும் கொடுப்பர். பக்கங்களில் ஓடி அலைபுரளுகின்ற பாற்கடலையும் மணிகள் பொருந்திய ஆதிசேடனது படமாகிய படுக்கையையும் கொடுப்பர். தாமரைமலர்மேல் வாழும் சகலகலாவல்லியைச் சேருகின்ற முதன்மையான வாழ்வையும் கொடுப்பர். முடிவில் அந்தமில் இன்பமாகிய வீடுபேற்றையும் தருவர். ஆதலால் நெஞ்சமே அவரைத் தஞ்சமாக அடைக.

குறிப்பு :—பேணுவோர்க்குத் தரும் என்று கூட்டுக. விற்பூட்டுப் பொருள்கோள். இந்திரன் முதலிய இறைவர் பதங்களும், அந்தமில் இன்பத்து அழிவில்வீடும், தரும் என்பது கருத்தாம். அவரைத் தஞ்ச மடைக என்பது குறிப்பெச்சம்.

கோடிமுருகர்.

ஒருகோடி சதப்படையான் பதினெருமுக்
கோடியரோ டுறுகண் தீர
அருகோடி வருமலையு மவுணனுர
மும்பிளக்க வயில்தொட் டானைக்
குருகோடி டத்துரப்பாட் குளங்கோடி
யுடல்கோடிக் கோடி போற்றி
தருகோடி முருகோனைச் சார்ந்துபவக்
கடற்கோடி தன்னைக் காண்பாம்.

பொழிப்பு:—வச்சிராயுதனை இந்திரன் முப்பத்துமுக் கோடிதேவரொடு துயர் திரவும் கடத்தற்கரிய உயர்ந்த சிகரங்களையுடைய கிரவுஞ்சமலையும் சூரன்மார்பும் பிளக்கவும் வேற்படை தொட்டோனும் புனத்திற் பறவையோட்டும் வள்ளிநாயகிபாற் காதலால் உளம் மாறுபட்டு உடல் குனிந்து கோடிக்கணக்கான கும்பிடுபோட்டவனுமாகிய கோடி முருகனை இடைவிடாது நினைந்து பிறவிக்கடலின் கரையைக் காண்பாம்.

குறிப்பு:—சதகோடி - வச்சிராயுதம். அது கோடி சதம் என நிலைமாறிற்று. கோடு இவரும் அருமலை எனக் கூட்டுக. கோடு = சிகரம். இவருதல் = உயர்தல். இனி அருகு ஓடிவரும் மலை எனப் பிரித்து அருகே ஓடிவந்து வளைப்பதுபோல் வளைந்த கிரவுஞ்சமலை என்றலுமாம். அல்லது வரும் மலை "வருங்குன்றமொன்றுரித் தோன்" என்பதுபோல் யானைமுகாசுரனாகிய தாருகனைக் குறிப்ப தென்பதுமாம்.

கோடீச்சுரர்.

வெருக்கோடி வரக்கண்ட கிள்ளையென
நமனார்க்கு வெருவி நெஞ்சம்
பருக்கோடி யல்லகண்டம் பட்டிடாம்
கொட்டையூர்ப் பதியாக் கொண்ட
திருக்கோடி யீச்சுரனார் திருவடிகள்
சிந்தித்துச் செங்கை கூப்பிக்
கருக்கோடி புகுதாமன் மலவிருளு
மிருவினையுங் கழன்றுய் வாமே.

பொழிப்பு:-கொட்டையூரைத் தம்பதியாகக்கொண்ட திருக்கோடீச்சுவரரின் திருவடிகளைச் சிந்தித்து அந்தத் தியானபலத்தினால் நாம் இனிமேல் பூனை யோடிவரக் கண்ட கிளி அஞ்சுவதுபோல் நமன் வரக் ,கண்டு நெஞ்சம் அஞ்சிப் பெரிய துன்பப்படமாட்டோம். கோடிக்கணக் கான பிறவியிலும் புகோம். மல இருளும் இருவினையும் நீங்கிக் கதியை அடைவோம்.

குறிப்பு :—வெருகு—இரண்டனுருபுத் தொகை. வெருகைக் கண்ட கிள்ளை எனக் கூட்டுக. அல்ல கண்டம்—துன்பம். "அல்ல கண்டம் கொண்டடியே னென்செய்கேனே" என்பது தேவாரம்.

பந்தாடுநாயகியார்.

இந்தாடு மரவநதி யிலங்குசடை யணிகொன்றைக்
கொந்தாடு பூந்துகளாற் குலவியபொன் னிறம்படைத்தே
எந்தாடுக் கங்களைந்தெம் மிதயமலர் மிசைப்பொலியும்
பந்தாடு நாயகிதாட் பதும்மல ரிணைதொழுவாம்.

பொழிப்பு :—பிறையும் ஆடும்அரவும் கங்கையும் விளங்கும் இறைவர்தம் சடையி லணிந்துள்ள கொன்றைப் பூங்கொத்துக்கள் சிந்தும் மகரந்தத்துகள் படிதலால் பொன்னிறம்படைத்தவையும் எமது தாழ்வான துக்கங் களைக் களைந்து எப்போதும் எமது இதயதாமரைமிசைப் பொலிவனவுமாகிய பந்தாடுநாயகியின் தாமரைமலர் போன்ற இரண்டு திருவடிகளையும் தொழுவாம்.

குறிப்பு:—தாழ் + துக்கம் = தாடுக்கம். வீரசோழிய விதி. புலவிக்காலத்தே அம்மையார் திருவடிகளிற் கடவுள் பணிதலின் முடியிலணிந்த கொன்றைமலர்த்துகள் பட்டுப் பூம்பாதம் பொற் பாதம் ஆயிற்று என்பது கருத்து. பிரபுலிங்கலீலை முதலிய நூலகத் துங் காணத் தகும் இக் கருத்து.

நால்வர்.

பின்னுஞ் சடையானே பெரியபொரு ளெனத்தேறி
யென்னேரு முய்கவென வென்பைப்பெண் ணுருவாக்கிக்
கொன்னுக விடநீக்கிக் குழவிகராந் தரவழைத்துச்
சொன்னூரிக் களித்தருணுற் ருெண்டர்மலர்க் கழல்போற்றி.

பொழிப்பு:—பின்னே தொங்குகின்ற சடையை யுடைய சிவபெருமானே பரம்பொருளென அனைவருந் தெளிந்து நற்கதி அடைய வேண்டுமென்ற பெருங்கருணை யால் எலும்பை பெண்ணுக்கியும், கொல்லும் பாம்பின் விடத்தை நீக்கியும் முதலை வாயினின்று அது விழுங்கிய குழந்தையை மீண்டும் வரச்செய்தும், ஊமைப்பெண் ணுக்குப் பேசுமாற்றலளித்தும் திருவிளையாடல்களைப் புரிந்தருளிய சைவசமயாச்சாரியப்பெருமக்கள் நால்வர் களது மலர்போன்ற திருவடிகளைப் போற்றுவோமாக.

குறிப்பு:—ஆக்கியும் நீக்கியும் அளித்தும் அருளிய நால்வர் என்று கூட்டுக.

சண்டேசுவரர்.

தந்தை யும்பிறப் புந்தம தாளற
முந்தை வீசி முதல்வர்தா ளெய்திய
எந்தை சண்டி யிணைமலர்ப் பாதங்கள்
சிந்தை வைத்துச் சிவனரு ளெய்துவாம்.

தம் தந்தையினது காலும் பிறவியினது முதலும் அறும்படி முற்காலத்தில் வெட்டி யெறிந்து சிவபரம் பொருளின் திருவடித் துணைபிடித்த எந்தையாராகிய சண்டேசுவரரது திருவடிகள் இரண்டையும் சிந்தையுள் வைத்து அதன் வழியே சிவபெருமானது திருவருளை அடைவாம்.

குறிப்பு:—இருதாள் அற ஒரு தாள் எய்தினூர் என்ற நயம் காண்க.

சோழநாட்டுச் சிறப்பு.

முன்னுரை.

மணிகொண்ட திரையாழியை மருங்கு உடுத்த நிலமகளுக்கு மதிமுகம்போன்றது பரதகண்டம். அதன் கண் திருநுதல் போன்றது தென்றமிழ்நாடு. அதன் கண் அணிந்த திலகம் போன்றது சோழநாடு. சோழநாட்டின் சிறப்பினைத் தோலா நாவின் மேலோர் பலர் தத்தம் நூல்களினும் தனிப்பாக்களினும் உளங்குளிரப் பாடியுள்ளனர். அன்னோர் புகழ்ந்த இந்நாட்டின் சிறப்பை யாமும் புகல முயலுதல் மாநாகம் வளைத்த மேருமலையைப் பூநாகமும் வளைக்க முயல்வதை யொக்கும். எனினும் ஒரு சிறிது முயல்வோம்.

நிலவளமும் குடிவளமும்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் நாட்டின் இலக்கணமாகக் கூறிய இயல்புகளனைத்தும் பொருந்தியது சோழநாடு. இந்நாட்டின்கண் மக்கள் உயிர்வாழ்தற்கு வேண்டிய எல்லா உணவுகளும் பெருமுயற்சி இல்லாமலே எளிதில் விளையத்தக்க விளைநிலங்களும் உள்ளன. விளைவிக்கும் உழவர்களும் உளர். வறுமை என்பதைக் கனவிலும் இந்நாட்டினர் அறியார். துறவோரும் அந்தணரும் புலவர்பெருமக்களும், கலத்தினும் காலினும் பெரும் பொருளீட்டும் வணிகரும் பல்வகைத் தொழிலிலும் வல்லவர்களும் தத்தம் முயற்சிக்கு இடையூறின்றி வாழ்கின்றனர். பசியும் பிணியும் இங்கு அணுகா. வசியும் வளனும் குறையா. நாடாவள முடையது இந்நாடு.

காவிரியாற்றின் சிறப்பு.

கடலின்நீரைக் கையாலள்ளி யுண்ட குடமுனிவர் (அகத்தியர்) அருந்தவமாற்றிப் பெற்றுக் கமண்டலத்தில் நிறைத்து வைக்கப்பெற்று ஐந்துகைப்பிள்ளையார் கவிழ்க்கப் பெருகி ஓடிவருவது காவிரியாறு. அது கோள்நிலைதிரிந்து கோடை நீடி வான் பொய்த்தகாலத்தும் தான் பொய்யாதது. சையமால் வரையிலிருந்து தண் புனல் பெருகிவருவதால் வையமாமகளின் மார்பிற் கிடந்த மணியாரம்போல் விளங்குவது. பல்லுயிர்களையும் பரிந்தூட்டிக் காத்தலால் தாயெனப் புகழும் தகுதி வாய்ந்தது. தன் புனிதநீரால் புணரியையும் புனிதமாக்குவது. இவ்வாற்றின் இருகரையிலுமுள்ள அத்தனை சிவாலயங்கள் வேறு எவ்வாற்றின் கரையில் உள்ளன? செல்லும் வழியிலுள்ள சிவதலங்கள்தோறும் பூவும் நீரும் பொன்னும் இறைத்து இறைவனை வழிபட்டு ஒழுகலால் எண்ணரும் பெருமையுடைய ஈசனடியார்களைப்போல் இலங்குகின்றது. "தாயைப்போலச் சேயர்" என்பதற் கிணங்க காவிரியன்னையின் அமுதுண்டு வாழும் மக்களும் சிவபத்திச் செல்வர்களாய்த் திகழுகின்றனர்.

சென்றடையாத திருவுடையானாகிய குன்றுடையான் வாழும் சிராப்பள்ளியும், கானவர்மடமகள்வள்ளி நாயகியின் தெள்ளிய சுவைத்தேனூறுகிளவிக்கு வாயூறி நின்றும், பிரமச்சாரியென்றும், ஞானபண்டிதனென்றும் புகழப்பெறும் முருகப்பெருமான் கல்லாலநிழலில் நால்வர்க்கு மெய்ப்பொருளைச் சொல்லாமற் சொல்லிய தந்தையார்க்கு ஒரு மொழிப்பொருளைக் குருவாகி யுபதேசித்துச் சாமிநாதன் எனப் பெயர்பெற்ற சாமிமலையும் இந்நாட்டிற் குறிப்பிடத்தக்க குறிஞ்சிநிலங்களாம். முல்லைநிலம் மிகுதியாக இல்லையெனலாம். பாலைநிலம் சிறிதும் இல்லை. மருதமும் நெய்தலுமே மலிந்தது சோழநாடு.

மருதவளம்.

இந்நாட்டின் எல்லாப்பாகத்திலும் காவிரியாறு கால்பரந்து பாய்கின்ற தோற்றம் பெரிய மரத்தின் அரை, கவை, கொம்பு, வளார், இலை, தளிர் முதலிய வற்றின் தோற்றம்போன்றது. உடம்பின் நடுநாடியிலிருந்து நரம்புகள் கிளைத்துப்போய் உடல் முழுதும் பரவியுள்ளனவும் போலும். வயல்நிலங்களில் நீர்பாயும் ஓசையும் உழவர்தொழிலின் முழக்கும் உழத்தியர் நாறு நடும் ஓசையும் களையடும் ஓசையும் குரவைப் பாட்டோசையும், கரும்பாலை ஓசையும், புள்ளினங்களின் ஓசையும் பெருகிக் கடலோசை போன்றொலிக்கும். நெற் பயிர் வளர்ந்து நிற்கும் காட்சி காவிரியின் குளிர்ந்த நீரால் உடல்குளிர்ந்து நிலமகள் மயிர்ப்புளகம் கொண்டதுபோல் தோன்றும். பசும் பயிர்களினிடையே செந்தாமரையும் வெண்டாமரையும் பூத்து விளங்க, தாமரைப் பாசடைகளினிடையே பெரிய வெண்சங்கம் தவழ்ந்து செல்லுதல் நீலவானிடையே உடுக்குலங்கள் விளங்க மேகத்தினிடையே முழுமதியம் தவழ்ந்துசெல்வதுபோல் தோன்றும். தெய்வ மலரென்று புகழப்பெறும் தாமரை மலர்களையும் களைகளைபவர் பிடுங்கி எறிவர். எத்தனை மேம்பாடுடையராயினும் பலர்க்கு இடையூறாக இருப்பவர்களை யாவரே விரும்புவர்.

களைகளெல்லாம் கட்டபின்னர் நெற்பயிர் பசும் பாம்புபோல் சூல்கொண்டு கதிரீன்று புன்மாக்கள் செல்வம்பெற்றதுபோல் பணிவின்றித் தலையுயர்த்தி இருந்து பின் நுணங்கிய நூற்கேள்வியுடையார் போற் பணிந்து நிற்கும். பத்தியுடைய திருத்தொண்டர் ஒருவரை ஒருவர் கண்டபோது வீழ்ந்து வணங்குவதுபோலவும் இருக்கும் அத்தோற்றம்.

ஒருங்கு தோன்றி ஒருங்கு வளர்ந்து, ஒருங்கு அறு படும் நெற்பயிர்கள் புவனங்கள் எல்லாம் இறைவனுல் ஒருங்குபடைக்கப்பட்டு இருந்து ஒரு காலத்து இறைவ னுல் அழிக்கப்பெறும் என்ற உண்மையைஉணர்த்தி, இவ் வுலகில் ஒன்று தோன்றி ஒன்று அழியக்காண்கின்ருேமே யன்றி எல்லாம் ஒருங்கே அழியாமையால் இவ்வுலகம் என்றும் ஒரே இயல்பாயுள்ளது, செயப்படுபொருளன்று, அதனுல் இதனை ஆக்கும் கருத்தா ஒருவன் இல்ன் என்று கூறுவாரின் கூற்றை மறுக்கச் சிறந்த ஏதுவாக நிற்கும்.

அறுத்த நெற்கதிர்களை மலைபோல் போர் ஆக்கு வர். பின்பு அதனை அதரி திரிப்பதற்காக உழவர்கள் அப்போரின்மேல் ஏறி நின்று நாட்காலையில் ஆட்களை நாவலோ என்று அழைக்கும் ஒலி,மன்னர்போர்க்களத்தில் யானைமீது ஏறிநின்று பகைவருயிரைக் கொண்டுபோகக் கூற்றுவனை அழைக்கும் ஒலிபோலிருக்கும். உதிர்த்த நெல்லை குன்றுபோன்றுயர்ந்த கூடுகளில் நிரப்பிவைப்ப தால் புனல்நாடு என்று பெயர்பெற்ற இந்நாடு மலைநாடு போலத் தோன்றும். மன்னருக்குச் சேரவேண்டிய ஆறி லொரு கடமையை மகிழ்ந்து செலுத்தி எஞ்சிய நெல்லை வயலில் வேலைசெய்த ஆட்களுக்கும் இரவலர்க்கும் வெறுக்குந்தனையும் கொடுத்து மிகுந்ததை மனைக்கண் உய்த்து விருந்தோம்பி உழவர்கள் வாழ்வார்கள். காவி ரியின் நீர்வளத்தாலும், அந்நாட்டின் பிடியெருவும் வேண்டாத நிலவளத்தாலும் விளையும் விளைவின் மிகு தியை எடுத்துரைப்பது எவ்வாறு? "**வேலியாயிரம் விளை யுட்டாகக் காவிரிபுரக்கும் நாடு**" என்று ஆன்ருேர் கூறி யது கற்பனையன்று வாய்மையே. "**சோழவளநாடு சோறு டைத்து**" என்பது பொய்யாமொழியே.

நெல்லினருகே கரும்பும் அதனருகே கமுகும் அத னருகே தென்னையும் அதனருகே மா, பலா, முதலிய கனி

தரு மரங்களும் வரிசை வரிசையாக நிற்கின்ற காட்சி, பசி யெனும் பகைவன் உள் நுழையாதபடி படைகளை அணிவகுத்து நிறுத்திவைத்ததுபோல் விளங்கும்.

தடாகங்களிலே எருமை புகுந்து குவளைப்பூக்களைக் குதட்டும். அதன் மடியிலே வரால் முட்டும். அதனைக் கன்றென்று கருதி மடிமடை திறந்து எருமை பால்சொரியும். அதனால் தடாகம் நிறைந்து அலைபுரட்டும். நீரோடு கலந்த அப்பாலை வெண்டாமரைத்தவிசில் வீற்றிருக்கும் அன்னம் நீரினின்று பிரித்துண்ணும், அத்தோற்றம் நூற் பெருங்கடலுள் நுண்பொருள் தெரிந்து, நாற்பயன் கொள்ளும் நாமகள் போன்றிருக்கும்.

பொய்கைகளிலும் பூஞ்சோலைகளிலும் புகுந்து நறுமணமும் பூந்தேனும் குளிர்ச்சியும் சுமந்து மெல்லிய நடையோடு திரியும் தென்றற்காற்று அடிவருடச் செழுங் கரும்பு கண்வளரும் தோற்றம் கண்டார்க்குவகை பயக்கும். சோலையில் மந்தி பொன்னிறமாகப் பழுத்த பலாப் பழத்தைக் கவர்ந்துசென்று மரக்கவட்டிலிருந்து சுளைகளைப் பிடுங்கித் தின்னும் தோற்றம் நரசிங்கம் கம்பத்தினிடையே தோன்றி இரணியனைப்பிடித்து அவன் வயிற்றைக் கிழித்துக் குடரைப்பிடுங்கித் தின்பதுபோல் தோன்றும். இன்னும் அம் மருதநிலத்தின் வளமும், காட்சியும் சொல்லுக்கடங்குவவன்றாகலின் இம்மட்டோடு நிறுத்துவோம்.

நெய்தல் நிலம்

காவிரியாறு கடலொடு கலக்கும் சங்கமுகத் துறையில் உள்ள காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பை யறியாதார் யார்? அதுபோல் வாணிபத்தால் பொருளீட்டிக் குபேரன் என்ன வாழ்கின்ற வணிகர்கள் மல்கிய பட்டினங்கள் பல சோழநாட்டின்கண் உள்ளன. திருமறைக்காடு,

நாகப்பட்டினம், காரைக்கால் முதலிய பல பதிகள் நெய்தல்வளம் மிகுந்தவை. கடற்கரையில் பிற நாடுகளுக்குச் சரக்கேற்றிப் புறப்படும் கப்பல்களும், பிற நாட்டிலிருந்து வாணிபம் செய்து பொன்னோடு மீண்டு நிற்கும் கப்பல்களும் நிறைந்து நிற்கும். பெரிய மரக்கலங்கள் தேர் போல் விளங்க, படகுகள் யானைபோல் அசைந்து நிற்க, அலைகள் குதிரைகள்போல் தாவியோட, சுறுமீன்கள் வாளோடு போர்செய்யும் வீரர்போல் துள்ள, பறவைகள் பல்லியம்போல் ஒலிக்க, கடற்கரை ஒரு போர்க்களம் போல் காட்சியளிக்கும்.

சங்குகளும் சிப்பிகளும் ஈன்ற முத்துக்களும் புன்னை அரும்புகளும் வேற்றுமை உணர இயலாதபடி கடற்கரைகளில் கலந்து கிடக்கும். கடலோரங்களில் முடத்தாழைகள் மடல் விரிந்து சோறுகான்று நிற்கும் காட்சி கடற்புலவு நாற்றம்பொறுமல் கான்று நிற்பதுபோல் தோன்றும்.

கழிக்கரைகளில் நீண்ட கால்களோடு அலகையும் நிலத்தில் ஊன்றி ஓடுமீனோடி உறுமீன் வருமளவும் அசையாது நிற்கும் நாரைகள், போலிவேடம் பூண்டு ஒழுகித் தக்கசமயம் பார்த்துத் தகாத ஒழுக்கத்தில் ஒழுகும் போலித்துறவிகளின் நிலை காட்டும். தாழைமலரின் தாதிற் படிந்து கருநிறம் மாறி வெண்ணிறம் படைத்த வண்டுகள் கழிகளில் மலர்ந்துள்ள பூக்கள்தோறும் இசை பாடிச் சென்று சென்று தேனுண்டு திரியும் காட்சி வெண்ணீறு அணிந்து இறைவனது புகழை இசையொடு பாடி மனைதொறும் சென்று ஐயமேற்றுண்ணும் தொண்டர் செய்கையைக் காட்டும்.

பரதவர் தம் திமில்களில் சென்று கொணர்ந்து மீன்களைக் குவிப்பர். நுளைச்சியர் சங்குகளையும் சிப்பிகளையும் அவையீன்ற முத்துக்களையும் பவளங்களையும் உப்புக்

குவியல்களையும் தனித்தனிக் குவிப்பர். இவற்றின் வாணிபத்தில் வரும் பெரும்பொருளால் நெய்தனிலமக்கள் குறைவற வாழ்வர்.

அரசர்கள்

இத்தகைய வளம் பொருந்திய இந்நாட்டைப் பல்லாயிரம் ஆண்டுகளாக ஆண்டுவந்தவர்கள் படைப்புக்காலந் தொட்டுச் சிறப்புப்பெற்றிருந்த சோழ மன்னராவர். அவர்களது நீதிவழுவா நெறிமுறைக்கு ஆவின்கடைமணி உகுநீர் தன்னெஞ்சு சுடத் தன் ஒரு மைந்தன்மேல் தேர் விடுத்து நீதிவழங்கிய மனுச்சோழனே போதிய சான்றுவான். அவர்கள் வீரத்திற்கு இமயமுதல் குமரிவரை என்பதல்லாமல் ஈழமும் தம் ஆட்சியில் அடங்க ஒருமொழி வைத்து உலகாண்ட கரிகால் வளவன், முதலாம் இராசராசன், கங்கைகொண்ட சோழன் முதலியோர்களே போதிய சான்றுவார்.

இச் சோழமன்னர் வேதாகமநெறி பிறழாது சிவபத்தி குன்றுமல் சைவமும் தமிழும் தழைக்க ஆண்டுவந்தனர். கரிகால் வளவன், கோச்செங்கணன், இராசேந்திரன், அநபாயன் முதலிய சோழர்களின் சிவபத்திச் சிறப்பை எவ்வாறெடுத்துரைப்பது? இவர்கள் தோன்றி யிலரேல் இத்தனை சிவதலங்கள் எவ்வாறு தோன்றியிருக்கும்? தேவாரத்திருமுறைகள் எவ்வாறு நின்று நிலவும்? திருத்தொண்டர்புராண மென்னும் தெவிட்டாவமுது எவ்வாறு கிடைத்திருக்கும்? ஒரும் வேதாந்தத்துச்சியிற் பழுத்த சாரமாகிய சைவசித்தாந்தம் எவ்வாறு இன்றும் நிலவுவதாக ஆகும்? சோழமன்னரேயன்றி அம்மரபிற் பிறந்த மங்கையர்க்கரசியாரும் ஏனையோரும் சைவம் நிலைநாட்டிய தாய்மாரன்றோ? ஞானப்பாலுண்டு நான்மறை மொழிந்த ஞானசம்பந்தர் திருவாக்கினுல் முன்னிலையில் வைத்துப்

புகழ்ப்பெற்ற பேறு இக்குலத்துப் பிறந்த பாண்டிமா தேவிக்கு வாய்த்ததுபோல் வேறு யாருக்கு வாய்த்தது? புறச்சமயப்படுகுழி வீழாது இறுதிவரையில் சைவநெறியில் நின்ற மன்னர்கள் சோழர்களே.

குடிகள்

"மன்னன் எப்படி வையகம் அப்படி" என்பதற் கிணங்க, சோழமன்னராட்சியில் குடிகளும் சைவநெறி பிறழாது வாழ்ந்துவந்தனர். அறுபான்மும்மை நாயன்மார்களில் பெரும்பாலோர் சோழ நாட்டினர். அம்மையாரின் ஞானப்பாலுண்டு அமுதமயமாம் பாடல் மொழிந்து கொள்ளைகொள்ள வீடுதவிய பரசமய கோளரியார் பிறந்ததும் இத் திருநாடன்றே? இத்தகைய பெரியோர் பலர் தோன்றியதாலும், பிறநாட்டிற் பிறந்த அடியார் பலர் (திருவாரூர்த் தேவாசிரிய மண்டபத்தில் இருந்த திருக்கூட்டம்போல) இந்நாட்டில் வதிந்தமையாலும், கிளிகள் நாகணவாய்ப்புட்கள் முதலிய பறவைகளும் திருநெறித் தமிழ் பாடும் சிறப்புப்பெற்றுள்ளது இந்நாடு.

கற்புடைமகளிர்

'கொண்டானிற் றெய்வம் பிறிதில்லை' என்று குறிக்கொண்டு ஒழுகுபவரும், பெய்யென்று பணித்து மழை பெய்விப்பவரும் ஆகிய இந்நாட்டு மகளிரின் கற்பின் பெருமைக்குக் கண்ணகி முதலிய கற்புடைமகளிர் அறுவருமே சிறந்த சான்றுவர். **காரைக்காலம்மையார், ஆதிமந்தியார்** போன்ற நல்லிசைப்புலமைமெல்லியர்களால் இந்நாட்டுப் பெண்மக்களது புலமையும், பத்தியும், கற்பின் திறனும் தெள்ளிதிற் புலனுகும்.

சிவ தலங்கள்

தொண்டர்குழாம் திரண்டு, மூர்த்தி, தலம், தீர்த்தங்களை முறையே வழிபட்டு இம்மை மறுமைப்பயன்களை

யெய்தி இன்புறற் பொருட்டாக இறைவன் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் தலங்கள் இந்நாட்டில் உள்ளன போல வேறு எந்நாட்டில் உள்ளன? கோயில் என்று சிறப்புப்பெயர் பெற்றதும் எம்மிறைவன் ஐந்தொழில் திருக்கூத்து அநவரதம் ஆடுகின்ற சிறப்புடன் திகழப் பெற்றதும் ஆகிய சிதம்பரம் தன்பால் அமையப்பெற்றது இந்நாடன்றே? வன்றொண்டப் பெருந்தகையை இடித்துரைத்துத் திருத்தொண்டத்தொகை தோற்றுவித்த அன்பர் கூட்டம் பொலியும் திருவாரூர் இந்நாட்டின்கண் அன்றே உள்ளது.

இந் நாட்டின் பெருமையனைத்தும் எடுத்தியம்ப இமையவராலும் இயலுமோ?

கொட்டையூர் நகரச்சிறப்பு

பூவேரி பொழியும் பொழில்கள் இருகரையிலும் வாய்ந்த காவேரி நதியும் சோழநாடு நிலமகளின் மார்பினை ஒக்கும். காவேரி நதியின் இருகரையிலுமுள்ள நகரங்கள் பொற்சரட்டிற் கோத்த மாலையிலுள்ள மணிகள் நிகர்க்கும். அம்மணிகளின் நடுவே விளங்கும் நாயக மணியேபோன்று கொட்டையூர் இலங்கும்.

பரதகண்டம் ஒரு தாமரை மலர். பல மொழிகளும் பேசும் பல நாடுகளும் அம்மலரின் அகவிதழ்கள். சோழ நாட்டில்உள்ள பல நகரங்களும் அத்தாமரையின் கேசரங்கள். அக்கேசரங்கள்சூழ நடுவே திருமகள் வீற்றிருக்கும் ஆதனமாகிய கொட்டையே கொட்டையூர்.

எல்லாவளங்களும் குறைவின்றி நிறைதலால் அவ்வூர் திருமகட்குச் செந்தாமரைபோன்றது. வடகலையும் தென்கலையும் பலகலையொடு வளர்தலால் நாவின் கிழத்தி நயந்துவாழும் வெண்டாமரைப்பூவை ஒக்கும் அவ்வூர்.

மெய்ப்பொருள் உணர்ந்த ஞானியர் மிகுந்து வாழ்தலால் ஞானமடந்தையின் நற்கோயில் நிகரும் இந்நகரம்.

இந்நகருக்குத் தென்திசையில் காவிரி ஒரு அகழி போல் அமைந்திருக்கிறது. பன்னீராண்டுகட்கு ஒருமுறை தீர்த்தங்களனைத்தும் வந்து படிந்து புனிதம் பெறுதற்கிடமாகிய மகாமகதீர்த்தம் அமைந்ததும் **திருக்குடமூக்கு, கீழ்க்கோட்டம், காரோணம்** என்ற சிறந்த சிவன் கோயில்களும், **சார்ங்கபாணியாகிய** திருமாலின் திருக்கோயிலும் தன்னகத்தே கொண்டதும், **காவிரி, அரிசில்** என்ற இரண்டு ஆறுகளையும் மாலை பூண்டதுபோல் தன்னிரு புறத்துங்கொண்டு விளங்குவதுமாகிய கும்பகோண நகரைத் தனக்கு இனியதுணையாகத் தன்னருகே கொண்டு விளங்குவது கொட்டையூர்.

புறநகரம்

இந்நகரைச் சூழ வானளாவிய பூஞ்சோலைகள் நன் குள்ளன. இச்சோலைகளின் இடையே நுழைந்துவரும் வெண்மதி பூந்தேனில் தோய்ந்து நனைந்து பொன்னிறமான பூந்தாதுகள் படிந்து நிறம் வேறுபாடுற்று மரக்கிளைகளினடுவே தொங்குகின்ற தேன் இருல்போல விளங்கும். நகரமாகிய மகள் தன் முகஅழகை நோக்குதற்குக் கிளைகளாகிய கையால் மதியமாகிய வட்டக்கண்ணாடியைப் பற்றிப் பார்க்கின்றாள் என்று கூறவும் கூடும்.

இச்சோலைகளில் வெய்யவனின் சுடுங்கதிர்கள் நுழைந்தறியா. சோலைகள் மேல்படிந்த முகில்கள் குளிர்ந்து நீர் மழை பொழிகின்றதோ அன்றிப் பூவின் உள்ளடங்காது வெளிவந்து தேன்மழை பொழிகின்றதோ என்று துணிந்து கூறல் இயலாது.

பூஞ்சோலைகளை அடுத்து தேமா, பலா, தென்னை, கமுகு, வாழை முதலிய பன்மரச் சூழல் அமைந்திருக்கிறது.

இடையிடையே தாமரை குமுதம் நீலம் முதலிய பூக்கள் காடுகள்போல் மலர்ந்த வாவிகள் உள்ளன. வேகத்திற்குப் பெயர்போன காற்று இச்சோலைகளிலும் படிந்து குளிர்ந்து வேகங் குறைந்து மந்தமாருதமாகி அந்தமா நகரில் திரியும்.

அகநகர்

இந்நகரத்தின் நடுவே கோடீச்சுரப்பெருமான் வீற்றிருக்கின்ற திருக்கோயிலும், அதனைச் சூழ முப்போதும் திருமேனி தீண்டுவாராகிய முதற்சைவஅந்தணர் மாளிகைகளும், சைவதபோதனர்மடங்களும் அவற்றைச் சூழ ஏனைய வைதிகஅந்தணர் மாளிகைகளும், அவற்றைச் சூழ முறையே மன்னர்தெருவும், வணிகர்தெருவும், வேளாளர் தெருவும், ஒன்றையொன்று சூழ்ந்து அமைந்திருக்கின்றன. கோயில் ஒரு குறடாகவும் கோயிலிலிருந்து பிரிந்து குறுக்கே செல்லும் தெருக்கள் ஆரக்காலாகவும் ஊரின் கடைசியிலே சூழ்ந்துள்ள வீதி பரிதியாகவும் அமைந்து ஒரு சக்கரம்போல் இந்நகரம் தோன்றும்.

மாளிகைகள் மிக உயர்ந்தன. வெண்சுதை தீற்றப்பெற்றன. வானூரும் மதியும் தலையில் தவழப்பெற்றன. சூலம் தாங்குவன. முகப்பிலே கருமுகில் படியப்பெற்றன. இவ்வாறு எண்ணிறந்த மாளிகைகள் விளங்குவது இந்நகரம் கோடீச்சுரம் என்ற பெயர் பெற்றமைக்கேற்ப எம்பெருமான் எண்ணிறந்த திருவுருக்கொண்டு காட்சியளிப்பதுபோலும், விண்ணின்மீது பிறைமதி உலாவித் தெண்ணிலாச் சொரிகையில் வெண்சுதை மாடங்களின் வெள்ளொளியும் நிலவினொளியும் வேறுபாடறிய முடியாமல் கலந்து பாற்கடல் பொங்கியதுபோல் தோன்றும். அக்காலை முயலாகிய நுளைஞன் ஏறிச் செலுத்தும் திமில் போல அப்பிறை தோன்றும், கடலின் அலைபோல் முகில் தோன்றும். நுளையன் வீசும் வலைபோலப் பிறையின் கதிர்

தோன்றும். வலையினின்று வாரி இறைத்த முத்துப்போல் உடுக்கள் தோன்றும்.

மாளிகைகள் பொன், மணி, நெல் முதலிய எல்லாச் செல்வங்களும் ஒருங்கே அமையப்பெற்றமையால் திருமகளிர் எண்மரும் சிறந்து வீற்றிருக்கும் செழுங்கோயில்கள் போன்றவை.

அந்தணர்

இந்நகரில் வாழும் அந்தணர்கள் மறை நான்கும் சிவாகமங்கள் இருபத்தெட்டும், அங்கங்கள் ஆறும், ஏனைய நூல்களும் வல்லுநராய் கலைகளின் பயனாக உள்ளது கண்ணுதற்பெருமான் திருவடிகளே என உணர்ந்து சிவபத்தி வழுவாத சீலம் உடையவர்கள். ஓதல் ஓதுவித்தல் ஏற்றல், ஈதல், வேட்டல், வேட்பித்தல் என்னும் அறு தொழில்களையும் முறை தவறாது நடத்துபவர்கள். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுதலால் அந்தணர் என்னும் பெயர்ப்பொருளுக்குத் தக்க எடுத்துக்காட்டாயமைந்தவர்கள்.

அரசர்

அந்தணர்க்கோதிய அருங்கலைகள் பலவற்றினோடும் போர்க்குரிய கலைகளும் பயின்று அறநூலில் வல்லுநராய் ஆண்மையும் அழகும் படைத்த மன்னர் மரபினோர் பலரும் இந்நகரில் வாழ்கின்றனர்.

வணிகர்

கொள்வதும் மிகைபடாது கொடுப்பதும் குறைபடாது நுகத்தினடுவேயுள்ள பகலாணிபோல் நடுநிலையாளராய்ப் பிறர்பொருளையும் தம் பொருள்போல் பேணிக் காக்கும் வணிகர் பலர் அவ்வூரில் வாழ்கின்றனர். அவர்கள் வறுமை இன்னதென்றறியாதவர்கள். ஆயினும் இம்மியளவு பொருளும் வீண்செலவு செய்யாதவர்கள். தக்க

அறங்களில் எத்துணைப் பெரும் பொருளும் எண்ணாது செலவு செய்வர். சொல்லிலும் செட்டாகப் பேசுவர். கோமுச்சுரருக்குத் துணையாக குபேரர்கள் கோடிப்பேர் அவ்வூரில் குடியேறியது போல் வாழ்கின்றனர்.

வேளாளர்.

'சீரைத் தேடின் ஏரைத்தேடு' என்ற முதுமொழியைப் பின்பற்றிப் பூமி திருத்தி உணவை விளைத்து எவ்வகை மாந்தரும் தம் தயவை நாடி நிற்பத் தாம் ஒருவரையும் பின் செல்லாதவர்கள் அவ்வூர் வேளாண்மக்கள். ஏனைய மாந்தர்க் கெல்லாம் உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் கருணையாளர் இவர். இவர்கள் தம் கையால் எடுத்து வயல்களில் நடுகின்ற நாற்று முடி திருந்தினலன்றோ மன்னர்கள் நவமணி முடி திருந்தும்! இவர்கள் தம் தாற்றுக்கோலை ஓச்சினலன்றோ மன்னர் செங்கோலோச்ச இயலும்! இவர்கள் மாளிகைகளில் கதவுகள் முதன் முதலில் தச்சன் நிலைகளில் பொருத்திய பொழுது செம்மையாய் அமைந் திருக்கின்றனவா என்று பார்ப்பதற்காக ஒருமுறை அடைத்ததேயன்றி மறு முறை அடையாதவை.

சோறு வடித்த கஞ்சி பாய்ந்தோடி அருகிலே உள்ள பக்கங்களில் குளத்தின் நீர் போல் தேங்குவதாலே அதில் செங்கழுநீரும் ஆம்பலும் முதலிய நீர்ப்பூக்கள் பூக்கும். உண்ண வந்த விருந்தினரை உபசரிக்கின்ற ஒலியும் உண்டு செல்வார் பின்னும் தமக்கு வேண்டும் பொருள் களைப் பெற்று வீடு கொண்டு செல்லும் ஒலியுமே இவர் மாளிகையில் நிறைந்திருக்கும். "வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்'' என்ற பொய்யா மொழி மெய்யே யாகுமாறு, இவர்கள் பண்ணு கின்ற புண்ணியத்தால் வித்து மிடாவிடினும் இவர்களது விளை நிலங்களில் செந்நெல் செழிக்கும் கன்னல் வளரும்.

இந்நகரில் இந்நகரமாந்தர் இருமனப்பெண்டிர்கள் கவறு முதலிய திருநீக்கப்பட்டார்தொடர்புகளை அறவே வெறுத்தவர்கள். ஆதலால் பரத்தையர்சேரியும் கள்ளுக் கடைகளும் சூதாடுகழகங்களும் இங்கு இல்லவே இல்லை.

தபோதனர்கள்.

ஈண்டு வாழும் சைவதபோதனர்கள் வேதமும், ஆகமமும், பன்னிருதிருமுறைகளும், பதினன்கு மெய் கண்ட சாத்திரங்களும், இலக்கண இலக்கியங்களும் கற்றவர்கள்; சாக்கிரத்தை நின்மல துரியா தீதத்தைப் புரியும் பாக்கியம் பெற்றவர்கள்; தம்மையடைந்த மெய் யன்பர்களை அவரவர்கள் தகுதிக்கேற்பச் சரியை கிரியை யோகம் ஞானம் ஆம் நெறிகளிற் செலுத்தி, சைவப்பயிர் வளர்ப்பவர்கள்.

மகளிர்

இந்நகரில் வாழும் மகளிர் திருமகளனைய அழகும் திருவும் பொருந்தியவர்கள்; கலைமகளும் மாணுறும்படி கல்வியில் வல்லவர்கள். நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு எனும் நாற்குணத்திற்கும் உறையுளாவர்கள். தம் கணவனையே தெய்வமாகக் கொண்டு வழிபட்டு மழை வளந்தரும் கற்பு வாய்ந்தவர்கள். அவர்கள் தம் கணவர் வழிபடும் அம்மையையும் அப்பனையும் அன்றிச் சிறுதெய் வம் வழிபடா முதற்கற்பின் தலைநின்றவர்கள். பிறர் மனம் புகாத பெருந்தன்மை வாய்ந்தவர்கள். இவர்கள் கற்பின் திறத்தாலே தம் கணவரையும் பிறர் மனை நோக் காத பேராண்மையாளர் ஆக்கியுள்ளார்கள். வருந்தி வந்தவர்க் கீயாது வறிதே கழிந்த நாள் இவர்கள் கண்டதில்லை. விருந்தோம்பா நாளையே வெறு நாளென இவர் அஞ்சுவர். இவர்களது சிவபத்திச் சிறப்பை என் னென்பது? தாலாட்டுவது **பந்தாடு மெல்விரலியின்**

புகழைப் பாடியே, கழல், பந்து, அம்மானை, சாழல், தெள்ளேணம், முதலிய விளையாட்டுக்களில் பாடுவது எம்மான்றன் புகழ்களையே, இத்தகைய மனைவியரோடு கூடிச் செய்யும் இல்லறமன்றோ நல்லறமாவது! யாதொரு குறைவுமின்றி எல்லா இன்பமும் எளிதிற்பெற்றுச் சிவ நெறியல்லது அவநெறி நுழையாது பூமி மேல் துறக்க மெனவும் சிவலோக மெனவும் விளங்குவது இந்நகரம்.

முதல் அத்தியாயம்

தோற்றுவாய்

வானவர் குழாம் மகிழ ஞானமுனிவர்குழாம் வேள்விகளியற்றுதற்குச் சிறந்த தானமாயுள்ளது தபுதலில் புனல்மலி கவுதமியாற்றங்கரையிலுள்ள நெய்ம்மலிபுகை சூழ் நைமிசாரண்யம்.

அக்கானம், வேள்விகளுக்கின்றியமையாதவற்றை உதவக் காமதேனு என்றும் வாழ்தலானும் வேள்வியில் அவியூண் பெறத் தேவர்கள் கூட்டம் நெருங்கி இருத்தலானும், ஓமப்புகை சூழ்தலால் சுரும்பு மூசாச் சுடர்ப்பூம் பொழில் நிலவுதலானும், விண்ணவர் நாட்டுப் புண்ணியக் கற்பக வனம் மண்மிசைப் பொலிந்து விளங்குதல் போன்றது.

அவ்வனத்தே ஒருவனை யுணர்ந்து இருபிறப்புற்று முத்தீயோம்பி நான்மறை பயின்று ஐம்பொறியவித்து அறுபகை கடந்து எழுபிறப்பினியுரு முனிவர் எண்ணருங் குணத்தர் ஒன்பது வகையுருவத்தெம் பெருமான் பால் இடையறுப் பத்தியமையுடையார் பல்லாயிரவர் பன்னீராண்டின் முடிவு பெறும் வேள்வியொன்றை வேட்குமாறு

கூடினர். அவருள் குறிப்பிடத்தக்கார் கபிலர் முதலாயி னோ ராவர்.

ஆருயிர்களுய்யுமாறு அருமறைப்பொருள்களை ஆராயு மவருள் ஒருவர் பிறவியெனும் பொல்லாப் பெருங் கடலை எளிதில் நீந்தத் தோணி போன்ற இறைவனது திருவருளைப் பெறுதற்குரிய சிறந்த உபாயம் யாது என வினவ, ஒருவர் தவமேயெனப் பிறிதொருவர் தானமேயென இன்னொருவர் வேள்வியே என, வேறொருவர் வாய்மையே யென இவ்வாறு பலரும் பலகூறி ஒருமுடிவு கொள்ளா திருந்தனர்.

அவ்வமயம் அந்த முனிவர்கள் பண்ணிய புண்ணியங் கள் உய்ப்பக் கண்ணுதற்பெருமானைக் கருத்திற் பதித்த வரும் விண்ணவரும் பரவும் பராசரமுனிவரது புண் ணியப் புதல்வருமாகிய எண்ணரும் புராணங்கள் யாவை யும் வல்ல சூதமுனிவர் அங்கு நண்ணினர்,

வந்த சூதமுனிவரது தூய தாள் மலர்களை வணங்கி வரவேற்று ஆசனத்தமர்த்திப் பூசனையியற்றிப் பலவாறு அவரது மெய்ப்புகழை விரித்தோதித் தமது ஐயத்தினைக் கூறி அதைத் தீர்த்தருளுமாறு வேண்டினர்.

சூதமுனிவர்—முனிபுங்கவிரீர் ! நீவிர் அறியவேண்டு வன எல்லாம் அறிந்து நெறி பிறழாது வாழும் நீர்மையீர். திருநீறுங் கண்டிகையும் தாங்கித் திருவைந்தெழுத்துஞ் செப்பிச் சிவமே நினையும் திருவுடையீர். நீவிர் அறியாத தொன்றில்லை. ஆயினும் என்பால் வைத்த அன்பினாலும் எண்ணிலா உயிர்கண்மாட்டு வைத்த அருளினாலும் என் பால் இதனை வினவுகின்றீர். ஆதலால் ஓதுகின்றேன்.

நால்வகைத் தோற்றத் தெழுவகைப்பட்ட எண்பத்து நான்கு நூறாயிரம் வேறுபாடுடைய பிறவிகளினும் மக்கட்

பிறப்பே சிறந்தது. எய்தற்கரிய அதனை யெய்தியோர் செய்தற்கரிய அறங்கள் செய்து உய்தற்கரிய துயர்மிகு பிறவியினின்றும் உய்தற்குறுதி தேடிக்கொள்ளாரெனின் பொற்கிண்ணியிற் பெய்தற்குரிய பாலைக் கமரிற்பெய்த வராவர். அவ்வாறு செய்தற்குரிய அறங்களில் சிறந்ததும் சிவ புண்ணியமாவதும் மூர்த்தி தலந் தீர்த்தம் முறையே வணங்குவதாம்.

முனிவர்கள் :—அருண்மிகு பெரியீர்! நும்வாக்கே எங்கட்கு வேதவாக்கு. நீவிர் மொழிந்ததன்மேலும் ஒன்றினைப்பற்றி யாங்கள் ஐயமுறுவேமல்லேம். நிற்க, இப்பரந்த உலகில் மூர்த்தி தலம் தீர்த்தங்கள் எண்ணிறந் தனவாய் உளவே! இவையனைத்தையும், வணங்கல் பலர்க்கும் எளிதன்று. ஆதலால் எளிதினெய்தக்கூடிய தலமும் எளிதில் புண்ணியந்தரும் இனிய தீர்த்தமும் எளிதின் அருள்தரும் மூர்த்தியும் எங்களுக்கு மொழிந் தருள்வீராக.

சூதமுனிவர் :—பெரியோர்களே! இந்நிலமகளின் மதி முகம் போன்றது பரதகண்டம். முகத்தின் திலகம் போன்றது தண்டமிழ்நாடு. தமிழ் நாட்டில் சோழமண்ட லத்தில் கொட்டையூர் எனவழங்கும் ஏரண்டபுரமென் னும் ஒரு திருத்தலமுள்ளது. அது வான் பொய்ப்பினும் தான் பொய்யாப் பூவிரிபுனல்மிகு காவிரிக்கரையிலுள் ளது. காவிரியும் வேறுபல தீர்த்தங்களும் அவண் உள்ளன. அவ்வூரிலுள்ள ஏரண்டேசுரமூர்த்தி இணை யற்றதாம். அத்தலத்தில் வாழ்ந்து தீர்த்தங்களிற்படிந்து ஏரண்டேசுரரை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்ந் தோர் எண்ணிலாதவராவார்.

முனிவர்கள் :—ஆல நீழலமர்ந்தருள் அண்ணலார் போல ஈண்டுற்றருள் புண்ணியப்பெரியீர்! அத்தலம் ஏரண்டபுரமெனப் பெயர் பெற்றதெவ்வாறு? அங்கு

வழிபட்டுய்ந்தோர் யாவர்? அவரது வரலாற்றை உமது அமுதமொழிகளால் விரித்துரைப்பின் அது எம் செவி வாய்ப் பாய்ந்து சிந்தைப் புலத்தில் சிவப்பயிர் விளைக்கும், எனப் பணிந்து வேண்ட முனிவர் கூறுவாராயினர்.

முதலத்தியாயம் முற்றிற்று.

இரண்டாம் அத்தியாயம்.

ஏரண்டபுரமான வரலாறு

அன்றால நீழலமர்ந் தருமறையினுட் பொருளைப் பின்ருழுஞ்சடைமவுலிப் பெருமுனிவர்க் குரைசெய்த, குன்ருத பெருங்கருணைக் குன்றினடி குறித் தேத்திப் பொன்ருத புகழ்ச் சூதமுனி புகலத் தொடங்கினர்.

முனிவர்களே! எத்தவ வேள்விகளையும் இனிதின் இயற்றி முடித்தவரும் தத்துவ ஞானத் தலைவரும் சித்துருவச் சிவன் சேவடி மறவாதவரும் ஆகிய அத்திரி முனிவரின் பெருமையை நும்மில் அறியாதார் யார்? அவரது மரபிலே சத்துவகுணமே ஒரு தவவடிவங்கொண்டு வந்தாற் போல ஒரு புத்திரர் பிறந்தார். பாற்கடலிற் பிறந்த பனிமதி போன்ற அப்பாலர் குழவிப்பருவங் கடந்து கலை பயில் பருவம் அடைந்து நல்லாசிரியர்பால் சரண் புகுந்து வேத முதலிய கலைகளெல்லாம் கற்றுக் கலைநிறைந்த மதி போல் விளங்கினர். பன்னூலும் ஆய்ந்ததன் பயன் பதி பசு பாசந் தெரிந்து செந்நெறியில் நின்று சிவன் கழல் சேர்வதே எனத் துணிந்தார். எனவே அதற்கு இன்றியமையாத கருவியும் வேண்டிய வேண்டியாங்குதவுவது மாகிய தவம் செய்யப் பெரிதும் அவாவினர், அதற்குத் தக்க இடம் யாது எனத் தேடுவாராயினர். பல மலையும் காடும் யாறும் குளனும் நாடும் நகருங் கண்டு ஆங்காங்குள்ள

தீர்த்தங்களில் மூழ்கி மூர்த்திகளை வழிபட்டுக் கொண்டே வேலி யாயிரக் கலம் விளையும் சோழ நாட்டினை யடைந் தார். அந்நாட்டில் உம்பரேறிய புகழ்க் கும்பகோணத் தை யடைந்து கும்பேசுரரை வணங்கிப் புறம்பயத்திலே அறம்பல பகர்ந்தார் அடிமலர் போற்றிக் கபர்த்தீசுவரர் தான் மலர் ஏத்தி வணங்கிய பின் அச்சூழலிலே ஓராச் சிரமம் அமைத்துத் தவம் செய்யவேண்டுமென்று எண்ணி னார். அங்கு இடம் ஆராயும் போது கும்பகோணத்திற்கு வாயுதிக்கிலும், திருப்புறம்பயத்திற்குத் தெற்கிலும் கபர்த்தீச்சுரத்திற்கு வட கிழக்கிலும் உள்ள ஒரு புண் ணிய தலத்தைக் கண்ணுற்றார்.

அவ்விடம் அத்தி இத்தி அரசு ஆல் புரசு பலாசு புன்னை புன்கு நாகம் நரந்தை நாவல் ஞாழல் சரளம் சண் பகம் சந்தனம் தென்னை தேமா தேக்கு பாதிரி கொன்றை குருந்து குரவம் மரவம் மல்லிகை முல்லை மாலதி வகுளம் முதலிய பல்வகைப் பூவுங்கனியுந் தரும் தருவும் கொடியும் செடியும் நிறைந்து மணம் பரவி, குளிர் நிழலுடையதாய் வண்டு பாடக் குயில் கூவ மயிலகவக் கருவிளைக் கண்ணுற் கண்டு மகிழ்ந்து செருந்தியுங் கொன்றையும் செம்பொன் சொரியக் காந்தளங் கையால் தாங்கி மகிழும் பொலி வுடையதாயிருந்தது.

ஆங்கிருந்த உயர்ந்து தழைத்த் அகன்ற இலைகளையும் குளிர்ந்த நிழலையுமுடைய ஏரண்ட (கொட்டை) மரத் தினடியிலே அவ்வந்தணச்சிறுவர் தவம் முயலத் துணிந் தார். பெருநிழலும் நறுமணமலரும் வாய்ந்த உயர் மரங் கள் பல ஆங்கிருக்கக் கொட்டை மரத்தினடியிலே நிட் டை கூட அவர் நினைந்தது எற்றுலெனின் தவஞ்செய் வோர் வெருவரச் சென்று அடைந்து அவரது தவத்தை அழிப்பதே தொழிலாகக் கொண்ட அரம்பையர் ஆண்டு

அணுகாராதலின் கொட்டை மரத்தையே தமக்கு அரணுக் அவர் கொண்டார்.

அவர் சடைமுடி தரித்து மரவுரி உடுத்து வெண்ணீ றணிந்து கணமணி மாலை பூண்டு அறுபகை செற்று ஐம் புலனும் அகத்தடக்கிக் கரண நான்கும் ஒருவழிப்பட ஒருமையுணர்வோடு ஆண்டு அருந்தவம் ஆற்றி வந்த தன்றி, தம் அருந்தவம் எளிதில் நிறைவேறுவான் வேண்டி மணலால் முக்கட்பெருமானின் அருட்குறி ஒன்று நிறுவி, ஆகமவிதி வழுவாமல் அகங்கனிந்த அன்பொடு அருச்சித்து வந்தார். நாளடைவில் முனிவரின் தவவலி மையாலும் இறைவன் அளப்பருகருணையாலும் அம்மணலி லிங்கம் இறுகி வேரூன்றி என்றும் அசையா நிலைமை பெற்று, இன்றும் விளங்குகின்றது. ஏரண்ட மரத்தின் கீழிருந்து தவமுயன்றமையானே, அவர் **ஏரண்ட முனிவர்** என்ற திருப்பெயரைப் பெற்றார். அவர் நிறுவி வழிபட்ட அருட்குறியும் ஏரண்டேசுவரர் என்ற திருப்பெயர் பெற் றது. அத்தலம் **ஏரண்டபுரம் (கொட்டையூர்)** எனப் பெயர் பெற்றது,

அமுதக்கிணறு அமைத்தது.

தாம் நிறுவிய அருளிறை வடிவினுக்குத் திருமுழுக்கு நாடொறும் ஆட்டுவான் வேண்டி இந்த இலிங்கத்திற்கு வடகீழ்பால் ஒரு கிணற்றை அம்முனிவர் ஆக்கினார். அதன் நீர் தூய்மையுறும்படி அதில் அமுதத்தை ஆவாகித்தார். அதனால் அது **அமுதக்கிணறு** எனும் பெயர் பெறுவதா யிற்று.

வில்வாரண்யம் என்ற பெயர் பெற்றது.

அதனருகில் சிவ பெருமான் திருமுகத்தில் விளங்கு கின்ற முக்கண்களைப் போன்ற வடிவமுள்ள இலைகளை

யுடைய பெரிய வில்வமரம் ஒன்று தோன்றி வளர்ந்து இன்றும் நின்று நிழல்தந்து விளங்குகின்றது. விமலனுக்கு விருப்பமான வில்வமரங்கள் மிகப்பல அத்தலத்தில் தண்டளிரீன்று தழைத்து விளங்குவதால் அத்தலம் **வில்வாரண்யம்** என்ற ஒரு திருப்பெயரும் பெற்றுள்ளது.

பிலம்புக்க காவிரியை வெளிக்கொணர்ந்த வரலாறு.

ஏரண்டமுனிவர் இவ்வாறு அருந்தவம் ஆற்றி ஆங்கு அமர்ந்திருக்கும் நாளையில் வான் பொய்ப்பினும் தான் பொய்யாததும், சோழநாட்டைப் புனல்நாடாக்கி வேலி யாயிரம் விளைவித்துச் சோழவளநாடு சோறுடைத்து என்று புலவர்பெருமக்கள் புகழும்படி அதனைச் செவிலி போல் அமுதூட்டி வளர்க்கும் பூவிரிபுனல்மலிகாவிரி ஆறு **திருவலஞ்சுழி** என்ற தலத்துக் கருகில் நிலத்தைப் பிளந்து ஆழமான பில முண்டாக்கி அதன் வழியே இறங் கிற்று. அதனால் அவ்விடத்திற் கப்பால் பொன்னி நன்னதி யின் புனல் பரவுதலின்றி புனல்நாடு வறண்டது. ஆண்டு வாழும் மக்கள் முதலிய ஆருயிர் அனைத்தும் நீரும் உணவும் குறைந்து இடுக்கணுற்றன. அதுகண்டு அதுகாலை அந்நாடாண்டு வந்த **அரித்துவசன்** என்ற அரு ளுடைவேந்தன் அகமுருகி தன் குடைநிழல் வாழும் குடிகளின் இடுக்கண் அகற்ற உறுதி கொண்டு பிலம் புகுந்த காவிரியை வெளிக் கொணர்வான் பல்லாற்றானும் முயன்றும் பயன் பெறாஅய் இறுதியில் ஏரண்ட முனிவரின் பெருமையைக் கேள்வியுற்று அவரை அடைந்து வணங்கித் தன் இன்னலை எடுத்தியம்பி அதனை நீக்குமாறு வேண்டி னான். மன்னவனும் மன்னுயிரும் படுகின்ற இன்னலை அகற்றி ஈடேற்றுவான் அருண்மிகுந்த அம்முனிவர் காவிரி புகுந்த பிலத்தினை அண்மி அதனுள் இறங்கிக்

காவிரியைப் பண்டுபோல் வெளிவரும்படிப் பணித்தார். நிறைமொழிமுனிவரின் ஆணைக் கஞ்சிய அமுதநீர்க்காவிரியும் சற்றும் தாமதியாது முனிவரைத் தொடர்ந்து வெளியேறிப் பாய்ந்து சோழநாட்டைத் தொன்மையினும் வளமுடைய தாய்த் துலங்கச் செய்தது. அருந்தவர் நினைந்தால் ஆகாதது முண்டோ? ஏரண்டமுனிவரின் அருளின் பெருமையையும் அருந்தவத்தின் ஆற்றலையும் கண்ட விண்ணோரும் மண்ணோரும் நறுமலர் தூவி அவரது அடிமலர் வழிபட்டுத் தத்தம் குறைமுடித்து அகம் குளிர்ந்தனர். பன்னாள் பயிலருந் தவம்பயின்று முக்கட்பெருமானின் திருவருள்பெற்ற அம்முனிபுங்கவர் கபர்த்தீசுரலிங்கத்தின் அருகில் தாமும் சிவலிங்கவடிவமுற்று விளங்கும் பேறுபெற்றுத் தம்மை வணங்குவார் வேண்டும் இம்மை மறுமைப் பயன்களை எளிதினளித்து வீற்றிருக்கின்றார்.

கோடீச்சுரமான வரலாறு.

அருந்தவமாற்றிய பெருந்தகை முனிவீர்! அத்தலத்தின் சிறப்பை உணர்த்தும் மற்றோரரிய வரலாறும் கூறுவேன். கேண்மின் என்று சூதமுனிவர் கூறலானார்.

பண்டொரு காலத்தில் பத்திரயோகி எனப் பெயரிய முனிவர் ஒருவர் இன்னல்மிகும் பிறப்பு இறப்பாம் எழுகடலைக் கடந்துய்வான் துணிந்து பொற்கோட்டிமயப் பொருப்பகஞ் சார்ந்து செய்தற்கரிய தவமுயன்று கொண்டிருந்தார். அவரது அருந்தவத்தைச் சிதைக்க எண்ணி அரம்பையர்குழாம் ஆண்டடைந்து அவருள்ளத்திற் காமமென்னும் கடும்பிணியைப் புகுத்த நினைந்து பல்வகை ஆடல்பாடல்களை அவர் எதிரில் நிகழ்த்தினர். அளகபாரம் அலைந்து குலைந்திடவும் வதனவேர்வு அரும்பி முத்தென இலங்கிடவும் புன்முறுவல் நிலவெழவும் கலகவிழிக் கணைகள் அவர் மார்பில் பாய்ந்திடவும் கலை நெகிழ்ந்து

ஸ்பம்பொன்னிறத்தொடு மிளிரும் உறுப்புக்கள் வெளிப் படவும் அவள் புரிந்த மாயச்செயல்கள் ஒன்றினும் மனங் கலங்காதவராயினர். பைம்புனற்றடம் படிந்து பன்மலர் மணங் கூட்டுண்டு மன்மதன்றனைச் சுமந்துவந்த தென்றல் காற்றேனும் பால்நாறும் மலர்ச்சூதப்பைந்தளிர்களைக் கோதி வாஞ்ஞேரும் மையுற மதனவேள் காகளமாய்க் கூவும் குயிலோசையேனும் காமத்தீயை மூட்டும் ஏனைய எவையேனும் முனிவர் உள்ளத்தை வேறுபடுத்த மாட்டாவாயின. அருந்தவமாற்றியும் காமத்தைமாற்றியும் தீர்த்தங்களிற் படிந்தும் தெய்வப்படிமங்கள் நிறுவித் தொழுதும் பயன் என்? அரனடியரை யடைந்து அவர் களிலொருவரைக் குருவாய்க்கொண்டு வழிபடாதவர்க்கு ஞானநெறி கைகூடுவதுண்டோ? குருவருளின்றி முத்தி பெறலியலுமோ? இயலாது இயலாது. நிற்க,

திரிகர்த்த தேயத்தரசன் சத்தியரதி என்பானது புதல்வன் சூருசி என்பவன் அம்முனிவர் தவஞ் செய்யுஞ் சூழலிடை வேட்டையாடிப் போந்தனன். தம்மில் ஒவ் வொன்றே மனிதனுடைய மனத்தைச் செருக்கிலாழ்த்தும் செல்வம் இளமை வலிமை என்பவை அனைத்தும் ஒருங்கு வாய்த்த அவ்விளைஞன் வேட்டையாடி இளைத்தவனாய் முனிவரது பன்னசாலை முன்னினன். இவன் வருகையை அறியாது ஐம்புலனும் அடக்கி புறநினைவற்றிருந்த முனி வரைக்கண்டு அவரது நிலையறியாமல் மன்னவன்மகனாகிய தான் தேடிவந்திருந்தும் தன்னை வரவேற்காமல் முனிவர் இகழ்ந்தாரென்று கடுஞ்சினம் கொண்டான்.

"ஏ முனிவனே! வேந்தர்வேந்தனது செல்வப் புதல்வ னாகிய என் வருகை கண்டும் நீ இருந்த இடம்விட்டெழாது அவமதித்தாய். உன் இருப்பிடந் தேடி வந்ததால் என்னை எளியவனாகக் கருதி இகழ்ந்தாய். ஆதலால் மேதை மரி யாதை அறியாத உனக்கு நான் நற்புத்தி புகட்டுகின்றேன்

என்று சினந்து கூறி அவ்வரசிளங்குமரன் அக்காட்டில் புலிகோட்பட்டுக் கிடந்த ஒரு மனிதப்பிணத்தினைச் சிதைத்து ஊனினைக் கொணர்ந்து முனிவர் முன்னிலையில் குவித்தான். அதுகாறும் அவன் பேச்சுச்செயல்களில் ஒன்றும் அறியாதிருந்த முனிவர் நிட்டை கலைந்து கண்விழித்தார். எதிரில் கிடக்கும் ஊன்குவியலையும் உருத்தெதிர் நிற்கின்ற அரசகுமரனையும் கண்டு அவனே இதனைச் செய்தவன் என்றறிந்து சினத்தீமூண்டு "ஏ அறநெறி தவறிய அரசிளங்குமர! செல்வச் செருக்காலும் இளமை மயக்காலும் நீ அடாது செய்தனை, ஆதலின் படாதுபடுக. என்னெதிரில் மனித இறைச்சியை கொணர்ந்து குவித்த நீ இதனை உண்டு திரியும் "பிசாசனுகுக" எனச் சபித்தார். அவர் சாபவலியால் அவ்வாறே ஆயினுன். அருந்தவரை இகழ்ந்தவர்கள் அடையும் கேட்டினுக்கு இது சிறந்த சான்றன்ருே?

யானைமுதல் எறும்பு ஈருக அனைத்துயிரையும் பிடித்தலைக்கும் காமம் என்கின்ற கடும்பகையை வென்றும், அந்த முனிவர் சினமென்கின்ற சேர்ந்தாரைக்கொல்லியால் பற்றப்பட்டுத் தாம் பன்னுள் அரிதின் முயன்று தேடிய அருந்தவப் பயன் அனைத்தும் ஒருங்கே இழந்து தவத்தான் வறியராயினுர்.

நிகழ்ந்ததை நினைந்து வருந்திய வுளத்தராய் அவ்விடம் விட்டகன்று "சினத்தீயால் என் தவத்தையே சிதைத்துக் கொண்ட நான் அதற்குக் கழுவாயாகத் தலந்தோறுஞ் சென்று கோடி இலிங்கங்களைக் கண்டு வணங்குவேன். அதுவே இனி நான் சிவஞானம் பெறுதற்குச் சிறந்த வழி என்று விரதம் பூண்டு உலகில் தலதரிசனம் செய்து திரிவாராயினர். இங்ஙனம் பல்லாயிரம் இலிங்கங்களைக் கண்டு பணிந்து நல்வினைப்பயனுய் வில்வாரண்யத்தலத்தினைச் சென்றெய்தினுர்.

புலவர் நாவில் பொருந்திய புகழுடைப் பொன்னி நன்னதியின் வடகரையிலே உள்ளதும் தன்னைத் தரிசித்த பேர்க்கு இராசூயம் அசுவமேதம் முதலிய பெருவேள்விப்பயனை எளிதில் ஈவதும் அங்குற்றுச் செய்த தவம் ஜபம் ஓமம் தானம் முதலியவை அணுவளவாயினும் அவற்றிற்கு மலையளவு பயன் அளிப்பதும் ஆகிய வில்வாரணியத்தலத்தை அடைந்த முனிவர் அமுதக்கிணற்றின் அரும்புனலாடி ஏரண்டேசுரரை கண்ணாரக்கண்டு கையாரத் தொழுது வில்வத்தளிர்களால் அருச்சித்து மறைமொழிகளால் வழுத்தி நெஞ்சார நீடுநினைந்து பேரின்புற்றார். பின் அவ்விடம் விட்டு பிறதலம் சென்று வணங்க நினைந்து புறப்படும்போது இறைவனருளால் ஒரு திருவாக்கு அம்முனிவர் செவியுற வானில் எழுந்தது. "ஓ முனிவ, கோடிலிங்கம் காணவேண்டிக் கோடித் தலங்களுக்குக் கால் நகந்தேய நடத்தல் வேண்டா. இன்று நீ ஈண்டு தரிசித்த இவ்விலிங்கம் ஒன்றே கோடி இலிங்கங்களுக்கு நிகரானது. இதனைத் தரிசித்ததனாலேயே கோடி இலிங்கங்களைத் தரிசித்த பயனைப் பெற்றாய். உன் சூளுறவும் நிறைவேறிற்று. இனி நீ வேறிடம் சென்று அலைதல் வேண்டா. இஃதன்றி ஈண்டு வியத்தகு நிகழ்ச்சியொன்றும் சின்னாளில் நீ காண்பாய்,'' என்ற அவ்வானொலியைச் செவியுற்ற அம்முனிவர் இறைவனருளை வியந்து வேற்றிடம் செல்லும் நினைவை விட்டு ஆண்டே தங்கியிருந்தார். கோடிலிங்கத்தரிசனப்பயனைப் பத்திரயோகி முனிவருக்குப் பாலித்ததால் கொட்டையூர் கோடீச்சுவரம் எனப் பெயர்பெற்றது.

பந்தார்விரலி வந்தருள்புரிந்தது.

பத்திரயோகி முனிவர் பத்திமையோடு கோடீச்சுர மேய குழகனை வழிபட்டு வருநாளில் ஒருநாள் கோடீச்சுவரர் தாள்வணங்கி அஞ்சலிசெய்து நிற்கையில் கண்

கொள்ளாக் கவின்பொழியும் திருமேனி கதிர்விரிப்ப ஒரு பெண் பந்தாடிய வண்ணமாய் ஆண்டுவந்தாள். அவளைக் கண்டு அழகனைத்தும் திரண்டு ஒருங்கிருந்த வடிவமோ, அருளுருவமோ என ஐயுற்ற அம்முனிவர் "இமையா முக்கண் எம்பெருமான்றன் அங்கத்தினும் ஓர் பங்கினைத் தன் அழகின் பரிசாகப் பெற்ற உமையாள் போன்ற அம்மையே! நீ யார்? ஈண்டு வந்ததன் நோக்க மென்னை?" என்று வினவினர். அப்பெண் பொறிவா யிலைந்தவித்த புண்ணிய முனிவ! நான் வயதாலும் பெயரா லும் கௌரி எனப்படுவேன். இந்திரனும் வந்தனை செய்யும் இராசசேகரனை மனவாளனாகப் பெறுவான் விழைந்து ஈண்டு வந்தேன். உலகனைத்தும் தாங்கும் மலையன் என் னும் மன்னவன்மகள் யான் என்று இரட்டுறமொழிந்து முனிவர் வினாவுக்கு விடையிறுத்து மின்னெனமறைந்தாள். அவள் மறைந்தமை கண்டு முனிவர் வியந்து நிற்கையிலே கோடீச்சுரரது அருகில் அம்பிகையாரது அருளுருவம் ஒன்று புதிதாகத் தோன்றி நின்றது. அண்டமனைத்தும் அருள்சூல் கொண்டு ஈன்றும் கன்னியென இன்னமும் மறையெல்லாம் புகலும் மாதேவி இழைத்த திருவிளை யாடலே இது என உணர்ந்த முனிவர் முகமெலாம் கண் ணீர்வார மெய்குழைந்தழுது, தொழுதுவியந்தார். பந் தாடிய வண்ணம் அம்மையார் அங்குவந்து அருள் புரிந் தமையால் அத்தலத்தில் அவருக்குப் பந்தார் விரலி எனத் திருநாமம் வழங்கலாயிற்று. பந்தார்விரலியையும் அவளை பாகமாகக் கொண்ட எந்தை கோடீச்சுரரையும் இடையறா அன்பால் வழிபட்டுவந்தமையால் முனிவர் சிவஞானம் கைவரப்பெற்றவரானார். காயிலை தின்றும் காயமொறுத் தும் காசியனைத்தும் திரிந்தும் பெறுதற்கரிய ஞானசித் தியை கோடீச்சுவரர் எளிதில் இனிதில் ஈந்தமையால் முனி வர் அவரது அருட்டிறனை நினைந்து பலபடப் புகழ்ந்து வாழ்த்தினர். பன்னாள் பணி செய்திருந்து எடுத்த திரு

வடி நிழலை எய்தி இன்புற்ருர். பத்திரயோகி முனிவர் வரலாற்றினைக் கற்ருேரும் கேட்டோரும் காமம் கோபம் ஆகிய கடும்பகை வென்று இம்மை மறுமை வீடாகிய மும்மைப் பேறும் பெறுவர் என்று சூதமுனிவர் சொல்லி யருளினுர்.

மூன்ரும் அத்தியாயம்

சுருசிசாபவிமோசனம்

சூதமுனிவரது அமுதமொழிகளைக் கேட்டு அகங் குளிர்ந்த முனிவர்கள் அவரை வணங்கிப் பலவாறு புகழ்ந்து எங்கள் புண்ணியப் பயனுய் எழுந்தருளிய பெருந் தகையீர்! ஏரண்டபுரத்தின் இருஞ்சிறப்பும், அது வில்வாரண்யப் பெயர் பெற்ற தன்மையும் கோடீச்சுரமாகிய, வரலாறும், பத்திரயோகி முனிவர் முத்திபெற்ற பரிசும் பந்தார்விரலி பரிவொடு வந்தருளிய பண்பும், கேட்டின்புற்ருேம். பத்திரயோகியின் முனிவுக்காளான சுருசியின் கதி யாதாயிற்று என்பதையும் அறிய ஆவல் கொண்டோம். கூறி யருளுக என வேண்டினுர்கள். சூதமுனிவர் சொல்லலுற்ருர்.

பெரியோர்களே! பத்திரயோகியால் சபிக்கப்பட்டுப் பிசாசவடிவுற்ற சுருசியைத்தேடிவந்த அவனதுஸ்பரிவாரர்கள் அவனது கோரவடிவினைக் கண்டு அஞ்சி ஓடி அவனையின்றி நகரையடைந்தனர். அரசன்பால் நிகழ்ந்ததை மொழிந்தனர். அதுகேட்டு அரசன் அருமணியை இழந்த நாகம்போல அல்லலுற்றுப் புத்திர சோகத்தால் இராமன் காடு சென்றதைக் கேட்ட தயரதன்போல் புலம்பி மூர்ச்சித்தான். அவன் அருகிலிருந்த அறிவுடையமைச்சன்

பிரக்ஞாவான் என்பான். அரசனது மூர்ச்சை தெளிவித்து அவன் மனக்கலக்கம் தெளியுமாறு கூறலாயினன்.

செங்கோல்வேந்தே! நடந்த செய்தியைக் குறித்து வருந்துவதால் யாது பயன். போனத்தை நினைந்து வருந்தல் வானத்து மீனுக்குத் தூண்டில் வீசுவது போல்வதன்றோ? இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக் கிடும்பை படாதவர், என்பது தாம் அறியாததோ. நும் கவலையை விடுக்க. நும் அருந்தவப்புதல்வன் உற்ற சாபத்தை நீக்கிப் பண்டைய வடிவிற் காண்பதற்கான முயற்சியைசெய்வதே இனி நம் கடன்; அதற்குரிய வழியும் கூறுகின்றேன், கேளும் என்றான். அமைச்சனது அன்பு மொழியான அருமருந்தால் அரசனது கவலையாகிய நஞ்சின் வேகம் ஒருவாறு குறைந்தது. அவ்வழி யாது என்று அமைச்சனை வினவினன். அவனும் பின் வருமாறு கூறினன். அரசே! அரம்பையரில் கிருதாசீ என்பாளொருத்தி யுளள். திண்ணிய தவத்தார் நெஞ்சம்தீய காம விருப்பம் கொள்ளும்படி செய்விக்கும் பேரழகும் கொடுங்குணமும் உடையவள். அவள் ஒருகால் தமிழெனும் அளப்பருஞ் சலதி தந்தவராகிய அகத்தியமுனிவரைத் தன் மையல் வலையிற் படுத்தி மயக்க விரும்பினவளாய்ச் சந்தனப்பொதியத் தடவரை சார்ந்தாள். குறுமுனிவர் திருமுன்னர்க் குறுகித் தன் மாயங்களையெல்லாம் காட்டி மயக்க முயன்றாள், அவளது தகாத செயலைக் கண்ட தமிழ்முனிவர் சினந்து அடீ பேதாய் வருந்தித் தவமுயல்வோரைக் காமவலைப் படுத்திக் கவலைக்கடலில் வீழ்ப்பதே கடனாகக் கொண்டாய். என்னையும் கெடுக்க எண்ணி ஈண்டுற்றாய், உன்னை ஒறுக்காமல் விடுத்தால் உலகுக்கே கேடாகும் என்று கூறி நீ அரக்கியாகி அலைக என்று சபித்தார். அவளும் அவ்வாறே நரமாமிசம் உண்ணும் வல்லரக்கி யானாள்.

ஊனுண்ண வாயூறி யலைந்து திரிந்த கிருதாசீ ஒரு நாள் சுவேதர் என்னும் முனிவரைக் கண்ணுற்று அவரைக் கொல்ல நினைந்து விரைந்து எதிர்சென்றாள். வல்லரக்கி யின் வருகையையும் அவள் மனக்கருத்தையும் உணர்ந்த சுவேதர் தம் அருகே கிடந்த கல்லொன்றினைக் கையில் எடுத்து அபிமந்திரித்து வாயுவாத்திரமாக்கி அவள் மேல் ஏவினார்.

அத்திரம் தன்மேல் வருவதைக் கண்ட குத்திர அரக்கி அஞ்சி ஓடினாள். செய்வினை செய்தாரைத் தொடர்ந்து செல்வதுபோல் அத்திரமும் அவளைத் தொடர்ந்து சென்றது. காற்றுப்படையைக் கண்டு கலங்கி யோடின கிருதாசி கந்தமாதன பருவதச்சாரலை யெய்திக் கால்தவறி கபிதீர்த்தம் என்ற தடாகத்தில் வீழ்ந்து மூழ்கினாள். மருத்துப் படையைத் தொடர்ந்து சென்ற வன்கல்லும் அப்புனலில் வீழ்ந்து மூழ்கியது. அத்தீர்த்தத்தின் சிறப்பால் கிருதாசீ, சாபம் நீங்கி அரக்கியின் உருவொழித்து மீண்டும் அரம்பையின் யுருவெய்தினாள். சுவேதமுனிவரால் எய்திய கல்லும் பெண்ணுருவம் பெற்றது. அது யாங்ஙனமெனில், கௌசிகமுனிவரின் தவத்தைக்கலைக்க முயன்ற ரம்பை என்பாள் அவரது சாபத்தால் கல்லானாள். தற்செயலாக அக்கல்லினையே சுவேதர் காற்றுப் படையாக்கி யேவினார். அதுவும் கபிதீர்த்தத்தில் முழுகியதால் சாபநீக்கம் பெற்றது. ஆதலால் கொடுஞ்சாபம் பெற்றோர் அது நீங்குதற்குப் புண்ணிய தீர்த்தங்களில் ஆடுதலையே உபாயமாகப் பண்டும் இன்றும் கொண்டிருக்கின்றனர். நாமும் நம் சுருசியை எங்ஙனமேனும் அழைத்துச் சென்று புண்ணிய தீர்த்தங்களில் ஆட்டுவித்தால் அவன் பண்டையுருவெய்துவான். இதில் சிறிதும் ஐயுறற்க, எனக் கூறினான்.

அமைச்சன் கூறிய மொழிகளைக் கேட்ட அரசனும் அதற்கிணங்கித் தன் மகனையும் கட்டியடக்கி உடன் அழைத்துக்கொண்டு தலங்கள் தோறும் சென்று தீர்த்த மாடப் புறப்பட்டுச் சென்றான்.

செல்லும் வழியில் தன் குலகுருவும் வேதந்துறை செய்தவருமாகிய வியாசமுனிவரைக் கண்ணுற்றான். கட லில் வீழ்ந்து தத்தளிப்போர் புணை கண்டதுபோல் அக மகிழ்ந்து அவரது மலரடிகளில் வீழ்ந்து கோவென்று அழுது தன் குறையை இயம்பினான்.

நிலவேந்தன் துயர்கண்ட தவவேந்தர் அருள்கூர்ந்து மன்ன! வருந்தற்க, உன் துயர்தீர ஒருவழி கூறுகின்றேன். தென்றமிழ்நாட்டில் தீண்டினார் தீவினை தீர்க்கும் கங்கை யினும் புனிதமாகிய காவிரியாற்றின் வடகரையில் கோடீச் சுரமென்ற ஓர் தலமுள்ளது. அதன்கண் ஏரண்டேசுரர் என்ற சிவலிங்கமுளது. அதனருகே அமுதக்கிணறுளது. அக் கிணற்றுநீரால் உன்மகனை நீராட்டினால் இச் சாபம் ஒழியும். முன்னையினும் பன்மடங்கு பொலிவுள்ள பொன் னிறஉருவெய்துவான். புறந்தூய்மையே யன்றி அகத் தூய்மையும் பெற்றுக் கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்து, வேந்தற்கு வேண்டிய பண்பனைத்தும் ஒருங்குபெற்று விளங்குவான். அத்தீர்த்தத்தின் சிறப்புச் சொல்லின் எல்லையைக் கடந்தது. ஏரண்டரென்னும் முனிவராலாக் கப்பட்டதால் அவரது சிந்தைபோல் தெளிந்து தூயதாய்ப் பொலிவது. அதன் கரையிலே செய்த எத்தகைச்சிறு புண்ணியமும் பெரும்பயன் தரும். நீயும் அதனில் நீராடி னால் இம்மையில் எல்லாநலமும் ஒருங் கெய்தி மறுமையில் தேவருலகில் சிறப்ப வீற்றிருந்து இறுதியில் மீண்டு வாரா முத்தியும் பெறுவை. ஆதலால் விரைந்து நேரே அங்குச்

சென்று அமுதநீராடிக் கோடீச்சுரரைப் பணிக என்று பணித்தனர்.

அரசனும் அவரது அருளுபதேசப்படி ஏரண்டபுர மடைந்து அமுதக்கிணற்றில் முழுகுவித்தான். உடனே சாபமும் பிசாசவடிவமும் நீங்கிச் சுருசி என்றதன் பெயருக் கேற்ப வனப்பு மிக்க வடிவம் பெற்று விளங்கினுன். மன்னவன் தன் மனக்கவலை நீங்கிக் களிப்புற்ருன்.

பின்னர் சத்தியரதி மன்னன் தானும் அத்தீர்த்தத்தில் மூழ்கி அதன் கரையிலே பிதுர்க்கடன் முடித்து, அவர்களை யுய்யுமாறு செய்து மகிழ்வித்தான். கோடீச்சுரரது குளிர் மலரடிகளில் வீழ்ந்து வணங்கி கண்ணும் மனமும் மெய்யும் குளிர்ந்தான். எண்ணிறந்த பிறவிகளில் இயற்றிய பாவமனைத்தும் பாற்றியவனுனன்.

தன் மகனது பிசாசவடிவம் நீங்கிய கோடீச்சுரப் பெருமானுக்கு எழுநிலைக்கோபுரங்களும், கர்ப்பக்கிருகங் களும், பல்வகைமண்டபங்களும் பொலிய அழகிய திருக் கோயில் எடுப்பித்தான். கோயிலைச்சுற்றிலும் நான்மறை வல்லவர்களுக்கு மாளிகைகள் வகுத்துக் கொடுத்து, பல் வேறு குலத்தாரும் பண்புடன் வாழ ஏற்பாடு செய்தான்.

சித்திரைத்திங்கள் நிறைமதிநாளில் சித்திரை நட்சத் திரத்தில் திருத்தேர் விழாவும் நடத்தினுன். அந்தணர் முதலியோர்க்கு அவரவர் தகுதிக் கேற்ப அன்னதானம் சொர்ணதானம் முதலாகச் சொன்னதானமெல்லாம் சிறப் புறச் செயதான். அழியாப்புகழ் பெற்று, அவனிமிசைச் செங்கோலோச்சித் தனியாழி யுருட்டிப் பல்லாண்டு அரசு வீற்றிருந்து பின்னர் இவ்வுலகவின்பங்களில் உவப்புற்று தன்தோள்வரைத் தாங்கிய மாநிலச்சுமையைத் தன்

அருண்மை மகன் தோளில் இறக்கிய பின் கோடீச்சுரநாது குரைகழல் நினைந்து அருந்தவ முயன்று அந்தமில்வீ டெய்தினன்.

இவ்வாறு சூதமுனிவர் திருவாய்மலர்ந்தருளக் கேட்ட முனிவர்கள் தம் உள்ளத்துக் கொண்ட ஐயம் அகன்று மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் வணங்குதலே ஏற்ற வழி யெனத் தெளிந்து கோடீச்சுரமேயகுழகனை நினைந்து கும்பிட்டு வாழ்த்தி மகிழ்ந்தனர்.

கோடீச்சுரமேய குழகன் கழல் போற்றி
பந்தார் விரலம்மை பதமலரிணை போற்றி
திருநாவுக்கரசர் சேவடி வெல்க.

கல்வெட்டுக்கள்.

I

இடம் :—மகாமண்டபத்தின் வடபுறம்

குறிக்கப்பட்ட அரசன் :—மூன்றுங்குலோத்துங்கன்

வரி :—

(1) ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் மதுரையும் கருவூரு மீழமும் பாண்டியன் முடித்தலையுங் கொண்

(2) டருளிய ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்க்கு யாண்டு உஎ-ஆவது வடகரை விக்கிரம சோழவளநாட்டு இன்னம் பர்நா

(3) ட்டு பிர்மதேயம் கொட்டையூர் உடையார் திருக்கோடீஸ்வரமுடையார் கோயில் திருமடை விளாகத்து கும்பிட்டு இருக்கும்

(4) பொன்னைப்புடையான் அபையம் புக்கான் பாரி உதையஞ் செய் தாளான கோடி அம்மை இட்டு இருபத் தேழா

(5) வது நாளெழுபது வரை பரிமாறி வருகிற கோவை திருவிலைத்தட்டு நாராசமும் கருவும் உள்பட உரு ஏழினல் எடை

(6) ... ... சே முக்கால் செம்பு உரு பத்தின் எடை நூற்று, முப்பத்தொன்பது வெண்கல உரு நாலினல் எடை எழுபத் தாறரை

(7) பித்தளை உரு ஒன்றினல் எடை முப்பதரையும் திருப்பாட நத்து இட்ட பொன் உள்பட பொன் முக்கழஞ்சரை வெள்

(8) ளி நாற்கழஞ்சும் காசிடை கல்லாலும் முத்திரைக் கோலாலும் எடுத்தது. ஊது சங்கு ஒன்று இவ் எடைகளுக்கு உள்வ

(9) ரி கோவை திருவிலைத் தட்டு ... ... அழகிய வட்டில் ... ... கால் செப்புத் திரு ஹாலதி ... ...

(10) ௪ பஸ்மதளிகை ... ... பித்தளைமுங் ... ... ஷேக கலசம் ௫.

II

* இடம் :—மகாமண்டபத்தின் வடபுறம்

குறிக்கப்பெற்ற அரசன் :—மூன்றாங்குலோத்துங்கன்

வரி :—

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் மதுரையும் ஈழமுங் கருவூரும் பாண்டியனை முடித்தலையுங்

(2) கொண்டு வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் பண்ணி அருளிய வீரதேவற்குயாண்டுமுப்

(3) பத்திரண்டாவது உடையார் திருக் கோடீஸ்வரமுடையார்க் கு ... ... டையான் மங் ... ... பெ

(4) சுய் கொவனும் மங்கலவன் கன ... ... நவிட்டானு இந் நாயனார் திரு முன்பு மாளிகை உடையான் நச்சினி

(5) னார்க்கினியான் வழித்துணையனும் நச்சினார்க்கினியான் ....

---

* N.B:—இக்கல்வெட்டு நிலைமாறிவைத்துக் கட்டப்பெற்றிருக்கின்றது. அவைகளை முறைப்படுத்தி ஈண்டுக் குறித்துள்ளேன்.

III

* இடம் :—அர்த்தமண்டபத்தின் தென்புறம் வாசல் அடி. முக்கோள் கிழாநடிகளொடும் வீற்றிருந்த கோப்பரகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜாதிராஜ தேவர்க்கு சனிக்கிழமை யும் பெற்ற பூசத்திநாள் விக்கிரமசோழவளநாட்டு இன்னம்பர் நாட்டுத் திருக்கோடீஸ்வர முடையார்கோயில் ஆதி சண்டேஸ்வர தேவர்க்கு............கண்காணி செய்வார்க்கும் ஸ்ரீ காரியஞ் செய் வார்க்கும் தேவர்..............ஏரான குலோத்துங்கசோழவானவன் மங்கலத்து பன்ன நாகசயன் அரையன் பொற்சோழன் பாரியை அருமொழிநங்கை இக் கொட்டையூருடையார் திருக்கோடீஸ்வர முடையார்கோயிலில் எழுந்தருளுவித்த ஸ்ரீலிங்கம் புராணதேவர்க்கு அமுதுபடிக்கு நாள் ஒன்றுக்கு திருஅமுது அரிசி இரு நாழியும் கறி யமுது உள்ளிட்ட வெஞ்சினமும் அடைக்காய்.................இவ் வருமொழி நங்கை திருப்பணிக்கு புறம்பில் திருமதிள் தலைகட்டு

கைக்கு ஒடுக்கிநகாசு இரு நூற்றெழுபதுக்கும் ஆட்டைக்கு பொலி
சையால் பொலிவதாநநெல் இருபத்து இருகலநே தூணிப்பதக்கும்
....

* N. B:—இக்கல்வெட்டு சிதைந்தும், உள்வைத்துக் கட்டப்பட்டும் இருக்கின்றது. கிடைத்தவரை ஈண்டுச் சேர்க்கப்பட்டுள்ளது.

IV

இடம் :—இரண்டாம் கோபுரத்தின் வடபக்கம்.

In a slab.

வரி :—

(1) சிறுவல்லமான
(2) ந குலத்தி நால் பத
(3) த் தெவர்க்குத் திருமட
(4) ணப்படி காணி ஆ

V

இடம் :—முதல்கோபுரவாசல் அருகாலின் பக்கம் :

வரி 1. கலியுகாதி 5014, 15 தமிழ் பரி 2. தாபி௵ தைமீ 4 தீ கொட்டையூ 3. ர் ஸ்ரீ கந்துககிரிடாம்பாள்ஸ 4. மத ஸ்ரீ கோடீஸ்வர ஸ்வாமிக்கி 5. ஷையூர் வேளாளர் குலத்தில் செனி 6. த்த வெங்கிடாசலம் பிள்ளை 1, ஷையா 7. ர் பாரி மருதாயி அம்மாள் 2 தங்க 8. ள் உறிவார்த்தம் மேலக் காவேரி ஸர் 9, வமானியக் கிரமத்திலுள்ளத 10. ங் கள் சுயாச்சிதமான நஞ்சை ஏ-3. 11. ஸெ. 85 நிலத்தை ஷை சன்னதிக்கிகா 12. ல சந்தி கட்டளைக்கி நாள் 1-க்கு ஒரு 13. மாகாணி அரிசி கஉ பட்டை சாதம் 14. கோவிலுக்கு கூ பட்டை சாதம் நீக்கி தெ 15. சாந் திரிக்கு உடையவர் உத்தரவுபடி 16. கூ பட்டை சாதம் வினியோ கம் பன் 17. னுகிரது. சிவராத்திரி கட்டளைக்கி 2இமர 18. க்கா அரிசிக்கு கூo பட்டை சாதம் கொ 19. விலுக்கு ௩o சாதம் நீக்கி உடையவரு 20. க்கு ௩o சாதமும், சோமவாரக்கட்டளை 21-க்கி ௩ மாக்கால் அரிசிக்கு எஉ பட்டை 22. சாதம் கோவிலுக்கு ௩கூ நீக்கி உ 23. டையவற்கு ௩கூ பட்டை 24. கொடுக்கிறது மேப்படியாற் வெங் 25. கிடாசலம் பிள்ளை மருதாயி,

அம் 26. மாள் இவாள் இறந்த தினத்தில் கோ 27. வில் பஞ் சாயத்தார் ஒவ்வரு வரு 28. க்கு ரூ. ௧0, ௧0 ரூபாய் கொடுத்து 29. அவாள் கிரிகை நடத்தி வக்கிறது 30. ஷை வருஷாப்பியத்துக்கு ஷையா 31. ற 2 பேரும் தெவசத்துக்கு ஒ 32. வ்வருவருக்கும் இ. ரு ம்பதக் 33. கு அரிசியும் கோவிலாற் தெவசத் 34. துக்குள்ள கிரிகையை கோவிலில் 35. நடத்தி ௸ பிரும்மணுளுக்கு போ 36. ஸனம் நடப்பிவைத்து தெச்ச 37. ணை முதல் கொடுக்கிறது. இவை க 38. ளுக்காக ஷை கோயிலில் தர்மகர்த் 39. தா அண் ணுசாமி பிள்ளையால் 40. குருப்பிடப்பட்டிருக்கிறுர். விபர 41. படி தருமங்கள் நடத்த இனும் ஸா 42. ஸனமாக செய்து கொடுக் கப்பட் 43. டிருக்கிறது. ஷை தருமங்கள் 44. கோவிலாரெஸா ஸனத்தில் கண் 45. டிருக்கும் விப்ரப்படி ஜ தேதிமுதல் 46. நடத் திவருகிறது. இந்தப்படிக்கி 47. வேங்கிடாசலம் பிள்ளை மரு 48. தாயி அம்மாள் சம்மதி 49. ஷூ.........தர்மகர்த்தா அண்ணு மலை பிள்ளை.

VI

இடம் :—முதல் கோபுரத்தின் தெண்பக்கம்.

I Slab.

வரி :—

(1) ச்சக்கரவர்த்திகள் மதுரையும் ஈ

(2) ழையுங்கொண்டு வீரா அபிஷேகமு

(3) வன வீரதேவர்க்கு யாண்டு ௩1௬ வது உரு

(4) டியாரில் ஸ்ரீ புகலூர்மும்மேலரனதாரணுயகனு

II Slab.

வரி :—

(1) டிமும்...........பாண்டியன் முடித்தலை

(2) ....குலோத்துங்க சோழவளனாட்டு

(3) ....முற்றத்துக்கு உடலாகக் குடுத்த

(4) நந்தவனத்துக்கு உடலாக தானத்தால்

(5) ல் வெட்டு வாராவர் குடுந்த நியோகப்படி இந்

அம்மன் கோயில் கல் வெட்டு

இடம் :—அம்மன்கோயில் அர்த்தமண்டபத்தின் உள்பக்கத்து மேற்குச் சுவர்.

வரி :—

(1) சுவஸ்தி ஸ்ரீ எழுபத்
(2) தொம்பதுவள்
(3) நாடும் ந
(4) கரமும் பதினெ
(5) ண்ணேவிஷை
(6) யத்தாரும் த
(7) ன்மம் உ.

—— . ——

ஸ்ரீவித்யா பவர் பிரஸ், கும்பகோணம்.

அனுபந்தம்.

உ

செந்திலாண்டவன் துணை.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் தலைவர்களாக
இருபதாம் பட்டத்தில் எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீலஸ்ரீ

காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள்

அவர்களால் ஏற்படுத்தப்பெற்றுள்ள
பேரறங்களின் விவரம்.

நெ.	விவரம்	நிதி ரூபாய்
1.	சிவஞானசித்தியார் உபன்னியாசக் கட்டளை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ...	15,000
2.	கொட்டையூரில் நடுத்தரக் கல்விச்சாலை ஏற்படுத்த	11,500
3.	திருவாங்கூர் மகாராசா தேவாரப் பரிசு ...	5,000
4.	சேரமான் பெருமாள் தேவாரப் பரிசு ...	5,000
5.	மூவர் தேவாரப் பரிசு சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள் ...	10,000
6.	ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த போதகாசிரியர் நியமிக்க ...	60,000
7.	அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த உபகாரச் சம்பளம் அளிக்க ...	30,000
8.	திருப்பனந்தாளில் தமிழ்க் கல்லூரி நிறுவ ...	1,50,000
9.	இசைத் தமிழ்க் கல்விக்கு ...	1,00,000
10.	திருப்பனந்தாளில் கால்நடை வைத்தியசாலை ஏற்படுத்தவும், குடந்தைக் கல்லூரியில் உபகாரச் சம்பளமளிக்கவும் ...	20,000
11.	ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் ...	10,000
12.	இராமேச்சுவரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் ...	10,000
13.	திருநள்ளாற்றில் ஆவணிமூல அன்னதானம் ...	3,000
14.	ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம் ...	17,000
15.	திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் உணவு நிதி ...	1,00,000

16. திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை ... ஏ. 44 செ. 22 நிலவரும்படி

17. திருப்பனந்தாள் மண்ணியாற்றில் கேதாரக் கட்டம் ... 2,900

18. திருப்பனந்தாள் மண்ணியாற்றில் அரிச்சந்திரக் கட்டம் ... 5,000

19. கும்பகோணத்தில் மணிக்கூண்டு ... 25,000

20. தஞ்சையில் காசநோய் வைத்திய சாலை ... 21,000

21. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரர் நினைவுநாள் அன்னதானம் ... 9,000

22. மைசூர் மகாராசா தேவாரப் பரிசு ... 5,000

23. மாயூரத்தில் தேவாரப் பரிசு ... 5,000

24. சென்னை விவேகாநந்தா கல்லூரியில் சைவ சித்தாந்தக் கட்டளை ... 10,000

25. ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்தக் கட்டளை ... 20,000

26. ஸ்ரீவைகுண்டம் தேவாரப் பரிசு ... 5,000

27. மதுரைத் திருமலைநாயக்கர் தேவாரப் பரிசு ... 10,000

28. ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம், ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாணவிகட்கு ... 1,00,000

29. ஸ்ரீ காசியில் மகாத்மா காந்தியடிகள் நினைவு அன்னதானம் ... 5,000

30. ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசி, மதுரை, குடந்தை மாணவிகட்கு ... 1,50,000

31. டாக்டர் சுவாமிநாதய்யர் நினைவுத் திருக்குறள் பரிசு சென்னை ... 3,500

32. குடந்தையில் காந்தியடிகள் பசுப் பரிசு ... 1,000

33. காந்தி அடிகள் நினைவு அரியநாயகிபுரத்தில் ஹரிஜன மாணவ உபகார நிதி ... 3,000

34. ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நித்திய மகேசுவர பூசை ... 10,000

35. திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமிக்கு வெள்ளிக் கவசம் ... 4,000

36. விஷ்ணுபுரத்தில் ஹைஸ்கூல் படிப்பக நிதி ... 1,000

37. குடந்தையில் ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு ... 3,500

38. திருநெல்வேலியில் அபிராமி அந்தாதிப் பரிசு ... 3,500

39.	திருப்பனந்தாளில் தண்ணீர்ப் பந்தல் தருமம்	...	3,500
40.	ஸ்ரீவைகுண்டத்தில் படிப்பக நிதி	...	3,500
41.	சிதம்பரம் உயர்தரப்பாடசாலை மாணவர்களுக்கு உணவு நிதி	...	35,000
42.	சிதம்பரத்தில் திருவாதிரை, ஆனி உத்திரம் நாட்களில் அன்னதானம்	...	12,000
43.	இராமேச்சுவரத்தில் ஆடி, தை அமாவாசைகளில் அன்னதானம்	...	3,500
44.	ஸ்ரீவைகுண்டத்தில் நூல் நிலையக் கட்டிடம்	...	10,825
45.	பஞ்சாப் அகதிகள் நிவாரண நிதி	...	5,000
46.	அரியநாயகிபுரத்தில் நூல் நிலைய நிதி	...	3,500
47.	ஸ்ரீ காசி கேதாரீஸ்வரர் கோவிலில் ஏழைகள் அன்னதானம்	...	5,000
48.	ஸ்ரீவில்லிப்புத்தூரில் தேவாரப் பரிசு	...	3,500
49.	திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோவிலில் மின்சார தீபம்போட	...	7,500
50.	காஞ்சியில் மூவர் தேவாரப் பரிசு	...	5,000
51.	திருவஞ்சைக்களத்தில் சேரமான் பெருமாள் நினைவு அன்னதானம்	...	7,000
52.	28வது நம்பர் ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானத்தின் முதல் ஆண்டு உதவி நிதி	...	5,000
53.	30வது நம்பர் ஸ்ரீ செந்திலாண்டவன் உணவு நிதியின் ஸ்ரீ காசிப் பல்கலைக் கழக முதல் இரண்டு வருட உதவி மூலதனம்	...	14,000
54.	28வது நம்பர் ஸ்ரீ செந்திலாண்டவன் நிதியின் திருச்செந்தூர் முதல் ஆண்டு உதவி மூலதனம்	...	5,000
55.	ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் படிப்பகப் பராமரிப்புக்காகக் கட்டிடமும் நிலமும்	...	15,000
56.	மாளவியாஜீ பெயரால், கல்கத்தா, டெல்லி, அலகாபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் முதலிய பல்கலைக் கழகங்களில் சைவ சித்தாந்த உபன்னியாசக் கட்டளை	...	5,000
57.	ஸ்ரீசெந்திலாண்டவன் அன்னதானம், சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர்	...	60,000